எனது ஊர்

# காரைநகர்

www.karaiNEWS.com

இதழ் 28

கனடாவில் இருந்து வெளியாகும் காரைநகர் செய்தி சஞ்சிகை. இலவசம். தொலைபேசி : 1 416 821 8390


காரைதீவு காரைநகராகி 100வது ஆண்டில் 2023









## உள்ளே...


☆ ஒப்பற்ற சேவையாளர் அமரர் தி.விஸ்வலிங்கம்...

☆ 1973 பொன்னகவை மாணவர்களின் பொன்னகவை கட்டிடம்...

☆ நமது வாழ்வும் வளமும்...

☆ சடையாளி பாடசாலைக்கு நிரந்தர வைப்பு...

☆ வி.விஜயரத்தினம் நிதியம் 50 இலட்சம்...

☆ நீலிப்பந்தனை துர்க்கை அம்மனுக்கு அலங்கார உற்சவம்...

☆ நூலக மேம்பாட்டிற்கு மேலதிக வங்கி வட்டி...














**'எனது ஊர் காரைநகர்'**
**வெளியீட்டு பிரதான அனுசரணை:**
**Dr.V.Vijayaratnam M.D Canada**

12.08.2023 அன்று காரைகரில் நடைபெற்ற தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளராக பத்து ஆண்டுகளிற்கு மேலாக கடமையாற்றிய திரு.நடராஜா வைகுந்தன் அவர்களிற்கான பிரியாவிடை!






பிரியாவிடை நிகழ்வில் வடமாகாண தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் மற்றும் கடந்த காலங்களில் காரைநகர் வங்கி கிளையில் முகாமையாளர்களாக பணியாற்றிய முகாமையாளர்கள் மற்றும் தற்போதைய முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.














# ஆக்கியோன் மனதிலிருந்து...

‘எனது ஊர் காரைநகர்’ சஞ்சிகையின் 28வது இந்த இதழ் உங்கள் கைகளிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.
காரைநகரின் குரலாக ஊடகத்துறையில் 18 ஆண்டுகளாக வலம் வரும் காரைநியூஸ் இணையத்தளத்தின் வரலாற்று பதிவுளாக இச்சஞ்சிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது. கனடாவில் 2006ம் ஆண்டு ஆரம்பித்து இன்று ஆர்வமுள்ள பலராலும் பல நாடுகளில் இருந்தும் கேட்டுப்பெற்றுக்கொள்ளப்பட்டு பெறப்பட்டு வருகின்றது.

காரைநகர் அபிவிருத்தியில், காரைநகர் மக்களின் வளர்ச்சியில் கடந்த 20 ஆண்டுகளாக செயற்பட்டவர்கள், உதவிகள் புரிந்தவர்கள், பதவிகள் வகித்தவர்கள் என எவருமே பதிவு செய்து கொள்ளாத, நினைவில் வைத்துக் கொள்ளாத பணிகளென பலவற்றை இந்த சஞ்சிகை பதியவைத்துள்ளது. கடந்த 27 இதழ்கள் ஊடாக கடந்த 20 வருட காரைநகர் பொதுப் பணிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி ஒரு சிறிய ஊரிற்குள்ளே ஊடகப்பணி ஆற்றி வரும் இந்த சஞ்சிகை ஊடாக உரியவர்களிற்கு தேவையான தகவல்களை வழங்கி அதனூடாக பல்வேறு தரப்பட்ட பணி கள் கடந்த 20 ஆண்டுகளில் நிறை வேற்றப்பட்டுள்ளன. அதற்காக இந்த சஞ்சிகை எந்த உரிமைகளையும் தனதாக்கிக் கொண்டதில்லை. ‘யார் குத்தினாலும் அரிசியாகட்டும்’ என்கிற கொள்கையோடு காரைநகர் மண்ணிற்கும் மக்களிற்கும் தேவையான பலவித அபிவிருத்தி பணிகளையும் தேவைகளையும் பலரும் கேட்கும் வகையில் உரைத்துக்கொண்டது. அதனை செவிமடுத்து தாமாக முன்வந்து ஆவண செய்தவர்களின் செயற்பாடுகள் ஏராளம் தாராளம்.

காரைநகர் மாணவர்களின் உடனடி தேவைகள் பலவற்றை ‘எனது ஊர் காரைநகர்’ ஊடாக தெரிவிக்கப்பட்டு நேரடி தொடர்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டு 2023ம் ஆண்டிலும் பலவித உதவிகள் நிறைவேற்றிக்கொடுக்கப்பட்டன. அவை மட்டுமன்றி ‘எனது ஊர் காரைநகர்’ சார்பிலும் தனிப்பட்டளவில் பல்வேறு பணிகள் பாடசாலைகளிற்கும் பாடசாலை மாணவர்களிற்கும் மட்டுமன்றி வாழ்வாதார உதவிகளையும் வழங்கியுள்ளோம்.

இச்சஞ்சிகை வெளியீட்டிற்காகவும் அதனை அஞ்சல் ஊடாக கனடாவில் பல நூற்றுக் கணக்கான கனடா வாழ் காரைநகர் மக்களின் கைகளில் சேர்ப்பிக்கவும் தொடர்ந்து ஆதரவு தரும் Dr.வி.விஜயரத்தினம் மற்றும் தொழிலதிபர் திரு.பாலசுப்பிரமணியம் மகாதேவன் ஆகியோருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

☆




**www.karainews.com**
**‘ எனது ஊர் காரைநகர் ’**
**தொகுப்பாளர்:**
தீசன் திரவியநாதன்
331 Trudelle Stree, Unit 34
Toronto, Ont. M1J 3J9
Canada
Email: theesan@karainews.com
**TEL: 416 821 8390**


காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்தில் நாள் தோறும் வருகை தரும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவண செய்யும் வகையில் 50 இலட்சம் ரூபாய்கள் வைப்பில் இடப்பட்டு அதன் மாதாந்த வங்கி வட்டி பணம் பயன்படுத்தப்படவுள்ளது!

05.05.2023 அன்று கனடாவில் நடைபெற்ற பிரமேந்திர(தீசன்) திரவியநாதன், பிரமேந்திரதீசன் அபிராமி தம்பதிகளின் 50வது பிறந்தநாள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் பிறந்தநாள் நிகழ்விற்கு உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிதியில் இருந்து 50 இலட்சம் ரூபாய்களை காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்தை பயன்படுத்தும் மாணவர்களின் வருகையை அதிகரிக்கும் வகையில் பயன்படுத்தும் நோக்குடன் வங்கியில் தனிப்பட்டளவில் வைப்பில் இட்டு அதன் மூலம் பெறப்படும் வங்கி வட்டியினை அடுத்து வரும் 10 ஆண்டுகளிற்கு வழங்கவுள்ளதாக தம்பதிகள் இருவரும் அறிவித்திருந்தனர்.

அதனையடுத்து 16.05.2023 அன்று 50இலட்சம் ரூபாய்கள் காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி கிளையில் தனிப்பட்ட வகையில் ஐந்து வருட நிரந்தர வைப்பில் இடப்பட்டது. இதன் மூலம் வங்கி கழிவுகள் போக மாதாந்தம் ரூபா 55,000 வட்டியாக அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளிற்கு நிரந்தரமாக கிடைக்கப்பெறும்.

காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகத்தினர் இதனூடாக கிடைக்கப்பெறும் மாதாந்த வட்டிப் பணத்தினை மாணவர் வருகையை அதிகரிக்க மட்டும் பயன்படுத்தி தற்போது வெகுவாக குறைந்துள்ள நாளாந்த மாணவர் வருகையை அதிகரிக்க ஆவண செய்யவும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.அத்துடன் கடந்த யூன், யூலை, ஆகஸ்ட் மாத வட்டிப்பணமாக கிடைக்கப்பெற்ற ஒரு இலட்சத்து அறுபத்தையாயிரம் ரூபாய்கள் நிதியில் இருந்து மே மற்றும் யூன் மாதங்களில் அதிகூடியளவில் நூலகத்திற்கு வருகை தந்த 25 மாணவர்களிற்கு தலா 2000 ரூபாய்கள் வழங்கப்பட்டதுடன் நூலக வழாகம் துப்பரவு செய்யப்பட்டதுடன் நூலக மலசலகூடம் பாவனைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து காரைநகர் அபிவிருத்தி சபை நிர்வாகம் மாணவர் வருகையை அதிகரிக்க மேலும் திட்டங்களை வகுத்து அதனூடாக மாணவரகளின்நூலக பயன்பாட்டை அதிகரிக்க ஏதுவாக மாதாந்த வட்டிப்பணம் அடுத்து வரும் பத்து ஆண்டுகளிற்கு வழங்கப்படவுள்ளது.

## காரைநகர் இந்துக்கல்லூரிக்கு புதிதாக இரண்டு மாடிகளைக் கொண்ட இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் கட்டிக்கொடுக்க முன்வந்த பொன்னகவை மாணவர்கள்

காரைநகர் இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற 1973 மற்றும் 1974 ஜனவரி மாதம் பிறந்து 1989ம் ஆண்டு கல்விப்பொது சாதாரண தரப்பரீட்சை எழுதி இடப்பெயர்வு காரணமாக இடம்பெயர்ந்த பழைய மாணவர்கள் இந்த ஆண்டு 2023 தமது 50வது பொன்னகவை பிறந்த தினத்தை கொண்டாடி வருகின்றனர்.

அவர்களின் பிறந்தநாள் விழாக்கள் மற்றும் சிறப்பு ஒன்று கூடல்களில் கலந்து கொண்ட பழைய மாணவர்கள் ஒன்று கூடி தாம்படித்த பாடசாலையான காரை இந்துவிற்கு ஒன்றாக விஜயம் செய்ய தீர்மானித்தனர். அதன் பிரகாரம் 11.08.2023 அன்று ஒரு தொகை மாணவர்கள் காரை இந்து விற்கு விஜயம் செய்து தாம் படித்த பாடசாலையில் ஒன்றுகூடி அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களை சந்தித்தனர். அன்றைய தினம் அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலையில் ஏற்பட்டுள்ள வகுப்பறை பற்றாக்குறை, விளையாட்டு மைதான புனரமைப்பு மற்றும் பல்வேறு தேவைகள் இருப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.




பாடசாலையினை சுற்றிப்பார்த்த பழைய மாணவர்கள், தெற்குப்புற வழாகத்தில் நடராஜா ஞாபகர்த்த மண்டபத்திற்கு பின்னால் அமைந்திருந்த இரண்டு மாடிகளைக்கொண்ட 5 வகுப்பறைகளையும் மேல் மாடியில் பரீட்சை மண்டபத்தினையும் கொண்ட கலாநிதி ஆ.தியாகராஜா அவர்களது முயற்சியினால் 1967ம் ஆண்டு கட்டிக்கொடுக்கப்பட்டதுமான கட்டிடம் சீரமைக்க முடியாதளவில் பாதிப்படைந்துள்ளதையும் அந்த கட்டிடம் ஆபத்தானதாக கருதப்பட்டு கல்வித்திணைக்களத்தினால் தடைசெய்யப்பட்டிருப்பதையும் கண்டு கொண்டனர்.

அது மட்டுமன்றி மீளகுடியேற்றத்தின் பின்னர் காரைநகர் இந்துக்கல்லூரியில் காரைநகர் கல்விக்கோட்ட பணிமனை காரைநகர் இந்துக் கல்லூரியில் முன்னைய வகுப்பறைகளில் இயங்கி வருவதும் அதன் காரணமாக வகுப்பறைகளிற்கான பற்றாக்குறை இருப்பதும் கண்டு கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் பாடசாலையின் வடக்கு வளாக சயம்பர் சிலை பக்கமாக பார்வையிட்டபோது வடக்கு வளாகத்திலேயே அனைத்து வகுப்புகளும் நடைபெற்று வருவதுடன் அந்த வளாகத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பக்கமாக இரண்டு மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டிடங்கள் அண்மையில் அமைக்கப்பட்டிருந்தாலும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதி கட்டிடங்களை இணைக்கும் வகையில் வட கிழக்கு மூலையில் மேலும் இரண்டு வகுப்பறைகளை கட்டுவதற்கா ன போதிய இடவசதியும் அத்துடன் இரண்டு கட்டிடங்களையும் இணைத்து அழகானதொரு கட்டிடத் தொகுதியாக வடக்கு வளாகம் அமையும் என்பதனையும் தீர்மானித்துக்கொண்டனர். அதுமட்டுமன்றி மேற்படி வசதியாக உள்ள இடத்தில் இரண்டு வகுப்பறைகளை கட்டுவதற்காக 2020- 2021ம் ஆண்டு காலப்பகுதியில் தீர்மானித்திருந்த போதும் அதற்கான நிதியுதவி கிடைக்கப் பெறவில்லையென்பதும், பொருளாதார சீரற்ற தன்மை காரணமாக அந்த திட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையில் இருப்பதையும் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் அதற்கான உத்தேச மதிப்பீடு 2021 இல் எடுத்துள்ளதாகவும் அதனை இந்த ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழா மலரில் பிரசுரித்திருந்ததாகவும் அதன் விபரங்களையும் ஆவணங்களையும் அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர் வளங்கியிருந்தனர். 75 இலட்சம் ரூபா வரை உத்தேச மதிப்பீட்டில் திட்டமிடப்பட்ட இரண்டு வகுப்பறை மற்றும் அதற்குரிய தளபாட மற்றும் வசதிகளை உள்ளடக்கிய திட்டத்தினை தற்போதைய நிலவரப்படி பழைய மாணவர் சங்கத்தின் நேரடி பணிகளின் மூலம் அண்ணளவாக 50 இலட்சம் ரூபாய்கள் செலவில் கட்டிடப்பணிகளை மட்டும் கட்டிக்கொள்ள முடியும் என



தீர்மானிக்கப்பட்டு அதனை அன்றைய தினம் பாட-சாலைக்கு விஜயம் செய்த பழைய மாணவர்கள் நிறைவேற்றி வழங்க தீர்மானித்திருந்தனர்.

11.08.2023 அன்று தமது பழைய பாடசாலை ஞாபகங்களை மீட்டுப்பார்க்க சென்ற மாணவர்கள் 50 இலட்சம் ரூபாய்கள் கொண்ட இரண்டு வகுப்பறைகளை கட்டிக் கொடுக்க தீர்மானித்து திடசங்கற்பம் கொண்டனர். சொல்லும் செயலும் ஒன்றாக அன்றைய தினமே 1973 நண்பர்கள் வட்டத்தைக்கொண்ட சமூக வலைத்தளம் ஊடாக அனைத்து நண்பர்களுக்கும் செய்திகள் பரிமாறப் பட்டு அனைவரும் ஒருமுகமாக அத்திட்டத்தினை ஏற்றுக் கொண்டதுடன் அதற்கான நிதியுவியினையும் செய்ய முன்வந்ததுடன் ஒரு சில வாரங்களில் காரை இந்து பழைய மாணவர் சங்க வங்கிக்கணக்கிற்கு தமது நிதியினை நேரடியாக அனுப்பியும் வைத்தனர்.

அதனையடுத்து 23.08.2023 அன்று இரண்டு வாரங்களிற்குள் இரண்டு வகுப்பறைகளைக்கொண்ட இரண்டு மாடிக்கட்டிடத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது. மழைக் காலம் மற்றும் கட்டிடபணி அலுவலர்களின் சில தாமதங்கள் இருந்த போதிலும் 24.12.2023 அன்று முதலாவது தளத்திற்கான கொன்கிறீட் போடப்பட்டதுடன் மேற்கொண்டு இரண்டாவது தளத்திற்கான கட்டிடப்பணிகள் இடைவிடாது நடைபெற்று வருவதுடன் 2024 ஆரம்பத்தில் இப்பணிகளை நிறைவு செய்து இரண்டு வகுப்பறைகளை பாட-சாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கவும் உறுதிபூண்டுள்ளனர் 1973 மற்றும் 1974 ஜனவரியில் பிறந்த காரை இந்து பழைய மாணவர்கள்.














# நமது வாழ்வும் வளமும்

- பேராசிரியர் கலாநிதி ஸ்ரீஸ்கந்தராஜா



"காகம் பறக்காத இடமுமில்லை காரைதீவான் போகாத ஊருமில்லை" என்பார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொன்மையான குடியேற்றங்களில் ஒன்றாக காரைதீவு அமைந்திருந்ததென ஆய்வாளர்கள் கூறுவது உண்மையானால், பயணம் செய்வதும், ஊர்கள் பல போவதும் அப்பகுதி மக்களுக்கு இயல்பானதாகவே இருந்திருக்கும். இதையும்விட, காரைதீவு யாழ்ப்பாணப் பட்டினத்தின் கடல் வழி நுழைவாயிலில் அமைந்திருந்த காரணத்தினால், கடல் வழி வணிகத்தின் மூலம் அம்மக்கள் சமூகம் செல்வாக்கும், வருமானமும் பெற்றிருந்தமையும், பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நீராவிக் கப்பல்களின் போக்குவரத்து அதிகரிக்க, இப்பாதையின் அவசியம் வீழ்ச்சி கண்டதும் வரலாறு தரும் தகல்வல்கள்.



அதே ஆங்கிலேயர் ஆட்சியின் போது தென்னிலங்கையிலும், மலாயா நாட்டிலும் புதிய வாய்ப்புக்கள் ஏற்பட்டபோது அவ்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும், அதற்காகப் பயணம் பண்ணவும் எம்மூரவர்கள் தயங்கவில்லை. அக்காலத்தில் நம்மவர் மேற்கொண்ட ஊர்மாறிப்போன பயணங்கட்கும், இன்று எமது தலைமுறை ஊர்கள் தேசங்கள் பலவற்றுக்கு மேற்கொண்ட பயணங்கட்குமிடையே அடிப்படை வேறுபாடுகளுண்டு. அன்று வெளியூர் சென்றவர்கள் தமது சொந்தத் தெரிவின் அடிப்படையில் குறுகியகால நோக்கோடு பயணம் செய்தார்கள். பற்பல ஊர்களில் தொழில் புரிந்தாலும் வர்த்தகம் செய்தாலும் அத்தனை பேருமே தமது ஊரிலுள்ள சொந்த பந்தங்கள் காணி புலங்களை முற்று முழுதாக காப்பாற்றி வந்தனர்.



போன ஊர்களில் வேரூன்றும் நோக்கமும் அவர்கட்கு இருக்கவில்லை. அவர்களது நிலையோடு ஒப்பிடும்போது இன்று நாங்கள் மேற்கொண்டுள்ள பயணங்கள் பல்வேறு நிர்ப்பந்தங்களின் அடிப்படையிலானவை. நீண்ட தூரங்கட்கு பெருந்தொகைகளில், முழுக்குடும்பங்களாக எம்மைத் தள்ளிக்கொண்டு வந்த இப்பயணங்கள், வந்த இடங்களில் வேரூன்றும் வாய்ப்பினையும் ஏற்படுத்தியுள்ளன.



வேரறுந்த இனமாக ஆகின்றோமேயென அல்லற்படும் ஒரு தலைமுறையும், வேரற்ற நிலை தெரியாத அளவுக்கு புகலிட வாழ்க்கை தந்த மயக்கத்தில் வேறொரு தலைமுறை யுமாக, சிதறடிக்கப்பட்ட எமது சமூகத்தின் வாழ்க்கை ஓடிக்கொண்டிரு க்கின்றது. இங்கே தான் இடம்பெயர்ந்த நாடுகளில் உள்ள ஊர் அமைப்புக்களின் பங்கும் பணியும் தெளிவோடும் நிதானத்தோடும், தொலை நோக்கோடும் மேற் கொள்ளப்படவேண்டுமென்பது என் கருத்தாகிறது.



இன்று நாம் வாழும் காலம் மனித இனத்தின் வரலாறு என்றும் காணாத அளவுக்கு ஒரு நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருக்கின்றது. பொருளியல் சவால்களும், அரசியல் சவால்களும் தரும் நெருக்கடி போதாதென்று, இயற்கையின் நிலைகுலைவும் எமது தளம்பலுக்கு காரணமாகியுள்ள இந்நேரத்தில் எமக்கான அடையாளத்தையாவது ஓரளவு தெளிவாக வைத்துக்கொண்டால் புலம்பெயர் வாழ்வு சுலபமாகவிருக்கும்.



பிறந்த ஊர், பிரதேசம் சார்ந்த அடையாளமென்பது குடியேறிய முதல்தலை முறை யினருக்கு இலகுவானது. அது எம்மோடு இணைந்தது. அதைக்காப்பாற்றப் பெரும் முயற்சி தேவையில்லை. ஊர்வாரியான சங்கங்களும் மன்றங்களும் புலம் பெயர் சமூ கங்களிடையே இவ்வடையாளத்தைப் பேணுவதற்கும், அதனைக் கொண்டாடி மகிழ்வதற்கும் உழைத்து வருகின்றன. ஆனால் ஊர் சார்ந்த அடையாளத்துக்கும் அப்பால் தாய்மொழி, தேசம் சார்ந்த ஈழத் தமிழன் என்ற அடையாளமம் வேணப்பட்டு இரண்டாம் தலைமுறைக்கு கையளிக்கப்பட வேண்டிய ஒன்று. அந்த இன அடையாளம் மற்றவர்களால் மறுக்கப்படும்போது, அதை வெளிப்படுத்து வதற்கு எதிர்ப்புக்கள் காணப்பட்டபோது, அவ்வடையாளத்தைக் காப்பாற்றுவதற்காகத் தனிப்பட்ட அதேவேளையில், கொஞ்சம் கடினமான முயற்சி எடுக்கப்படவேண்டிய தேவையேற்படுகின்றது.

நான் குறிப்பிட்ட இருமட்ட அடையாளமும், அவற்றோடிணைந்து புகுந்த தேச அடை

யாளமும் முழுமையாக உருவாக்கம் பெறுவதற்கு, குறிப்பாக இரண்டாம் தலைமுறையினர் இந்த அடையாளம் பற்றிய தெளிவு பெறுவதற்கு ஏற்றவகையில் புலம்பெயர்ந்த நாடுகளில் ஊர் மன்றங்கள் எவ்வளவு தூரம் செயற்பட்டு வருகின்றன என்பதனையும் நான் கேள்வியாக முன்வைக்க விரும்புகிறேன்.

ஈழமண்ணின் ஊர்கள், கிராமங்கள், குறிச்சிகளின் பெயர்கள் எவ்வாறு தோன்றின என்பதனை அழகாக ஆய்வு செய்து அண்மைக்காலமாக வெளியிட்டு வருகின்றார்கள். காரைச் செடியின் பெயரோடு காரைதீவின் பெயர் இணைந்துள்ளதைக் குறிப்பிட்டு, காரைதீவு எவ்வாறு காரைநகரானது என்பதையும் தெளிவாக்கியுள்ளார்கள்.

பெயரளவில் நகரானாலும், அண்மைக் காலம் வரை அவ்வூர் கிராமம் என்றுமில்லைமல், நகரமென்றும் இல்லாமல் தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்டிருந்தது. அம்மண்ணின் தன்மையும், மக்களின் வாழ்க்கையும் பின்னிப் பிணைந் திருந்ததை நாம் நன்கறிவோம். இயற்கை தரும் வளங்கள் தான் ஒரு சமூகத்தின் வாழ்வியலைத் தீர்மானிக்கின்றன. அது போலவே அச்சமூகம் எவ்வளவு தூரம் தனது இயற்கைச் சூழலை புரிந்திருக்கிறதோ அதனடிப்படையில்தான் அச்சூழல் பேணப்படும். வளங்கள் நிதானத்தோடு கையாளப்படும். இந்நியதியைத் தாண்டிய சமூகங்கள் சில சிதைவடைந்த கதைகள் வரலாற்றில் நிறையவே உள்ளன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக முழுமையான ஒரு சமூகத்தைக் காப்பாற்றிய எங்களூர் மண், இன்று நம்மெல்லோரதும் இடப்பெயர்வின் காரணமாக ஓரளவு ஓய்வு பெற்றிருக்கிறதென்றும் சொல்லலாம்.

இன்றைய நோக்கில் இதையொரு வாய்ப்பாக கருதினோமானால், எதிர்காலம் மங்கலாகத்தான் தென்பட்டாலும்கூட, இனிமேல் வரப்போகும் வளர்ச்சி வளங்களுக்கு அமைவானதாக வேண்டுமெனில் என்ன படிகள் முன்னெடுக்கப்படலாம். எத்தனை பேர் கொண்ட சமூகம் அங்கே மீளச் சென்றடையும், எதிர்பார்க்கப்படும் கடல் மட்ட மாற்றங்கள், குடிநீர்வளம் என்பவை எவ்வாறு ஆய்வுசெய்யப்படலாம் என்ற பரந்த சிந்தனைகளை இப்போதே மேற்கொள்ள முடியும்.

சமூகக் கரிசனை கொண்ட ஊர் அமைப்புக்கள், நிறுவனங்கள் ஆலயப்புனர்நிர்மானங்களோடு நின்றுவிடாமல், அதற்கப்பாலும் சமூகப்பணிகளை மேற்கொள்ளவும், அதற்கேற்ற வகையில் எங்கள் இளம் தலைமுறையினரைத் தயார்படுத்தவும் முடியுமெனக்கூறி இந்த வாய்ப்பைத்தந்தமைக்கு நன்றிகூறி நிறைவு செய்கின்றேன்.

நடராஜா சிறீஸ்கந்தராஜா
பேராசிரியர்

பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் காரைநகர் ஆயிலியில் 1948ம் ஆண்டு பிறந்து அதே கிராமத்தில் காந்திய வழியில் புதுமையான கல்வியை வழங்கிய வார்தா ஆரம்பப் பள்ளியில் ஏழாண்டு வரையிலான கல்வியைப் பெற்றவர்.

தொடர்ந்து காரை யாழ்நகர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிகளில் இடைநிலைக் கல்வியையும், பேராதனை பல்கலைக்கழகம், அவுஸ்திரேலிய சிட்னிப் பல்கலைக்கழகம் என்பவற்றில் விலங்கு வேளாண்மை துறையில் உயர்கல்வியையும் பெற்றவர். தனது 45 ஆண்டு கால பன்னாட்டு உயர் கல்விக்கூடங்களினூடான பயணத்தின் போது அனுபவரீதியான மாற்றுவழிக் கற்றல்(experiential learning) முறைகளையும், சமூக மாற்றத்தை நோக்கிய, மக்கள் பங்கேற்பு மிக்க ஆய்வு (research) வழிகளையும் வளர்ப்பதில் பங்காற்றியவர்.

அண்மையில் சுவீடன் நாட்டிலிருந்து இளைப்பாறியதைத் தொடர்ந்து தயாக மேம்பாட்டில் இயற்கை வளங்கள் பேணுதலின் அவசிய, அவசர தேவைகளை நிரப்பும் செயற்பாடுகளில் வட, கிழக்கு பல்கலைக் கழகங்கள், மற்றும் அரச விவசாய, நீர்வளத் திணைக்களங்கள், பொதுமக்களையும் இணைத்துச் செயற்படுகின்றார்.

02.12.2023 அன்று கனடாவில் கனடா காரை கலாசார மன்றம் நடாத்திய ‘காரை வசந்தம்’ நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பு செய்திருந்தார்.





# வலந்தலை வடக்கு(சடையாளி) அ.மி.த.க பாடசாலைக்கு நிரந்தர வைப்பாக 16 இலட்சம் ரூபாய்கள்




1.65 M தொகைக்கான நிரந்தர வைப்பு சான்றிதளை காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு.P.பிரதீபன் மற்றும் உதவி முகாமையாளர் திரு.N.வைகுந்தன் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

**கா**ரைநகர் வலந்தலை வடக்கு(சடையாளி) அ.மி.த.க பாடசாலை காரை நகரின் பின்தங்கிய பிரதேசத்தில் இயங்கி வரும் பாடசாலைகளில் ஒன்றாகும். இப்பாடசாலைக்கு வருடந்தோறும் மாணவர்களின் கல்விசார நிகழ்வுகளை நடாத்துவதற்கு பலவித சிரமங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. தொடர்ச்சியாக கடந்த பத்து ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க ஒரு சில பழைய மாணவர்களால் மட்டுமே தொடர்ந்து அனுசரணை வழங்கப்பட்டு வந்த நிலையில் மேற்கொண்டு இந்த சிரமங்களை தவிர்க்கும் நோக்குடன் தீசன் திரவியநாதன் உள்ளிட்ட சில பழைய மாணவர்கள் திட்டமிட்டு நிரந்தர வைப்பாக பத்து இலட்சம் ரூபாய்கள் வைப்பிலிட்டு வழங்க 20.01.2023 அன்று தீர்மானித்திருந்தனர்.

இதனை ஏற்றுக்கொண்டு பழைய மாணவர்களிற்கு முகநூல் வாயிலாக அன்றைய தினமே அறிவிக்கப்பட்டது. அதனை முகநூல் வாயிலாக அறிந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒரு வாரத்தினுள் தமது ஆதவினை தெரிவித்து நிதியுதவி செய்ய முன்வந்தனர்.

31.01.2023 அன்று மொத்தம் 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திற்கு கிடைக்கப்பெற்றது. அப்போதைய நாட்டு நிலமையில் அதிகூடியளவில் 23% வங்கி வட்டி வழுங்கப்படுவதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு ஜனவரி மாத இறுதி நாளான 31.01.2023 அன்று ஐந்து வருட நிரந்தர வைப்பில் இடப்பட்டது. இதன் மூலம் 3 இலட்சத்து எண்பது ஆயிரம் ரூபாய்கள் வங்கி வட்டி பழைய மாணவர் சங்க வங்கி கணக்கிற்கு வங்கியினால் வைப்பில் இடப்படும் என்பதும் 31.01.2024 அன்று முதலாவது தவணை வட்டிப்பணம் பெறப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.



பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர வைப்பு சான்றிதளை பாசாலை அதிபர் திருமதி சியாமளா செல்வானந்தராசா மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் திரு.வே.முருகமூர்த்தி மற்றும் பொருளாளர் திரு.கை.நாகராசா ஆயியோரிடம் பழைய மாணவர்கள் சார்பில் திருமதி ச.சுந்தரேஸ்வரி, திரு.தீசன் திரவியநாதன் ஆகியோர் கையளித்தனர்.

மேற்படி 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்களை வழங்க முன்வந்த பாடசாலையின் பழைய மாணவர்கள் விபரம் மற்றும் தொகை வருமாறு:

1. சி.கோபாலகிருஸ்ணன்(சந்திரன், பிரான்ஸ்) - 2 இலட்சம்
2. அ.கணேசலிங்கம் (லிங்கன், கொழும்பு) - 2 இலட்சம்
3. தி.பிரமேந்திரதீசன் (தீசன், கனடா) - 1 இலட்சம்
4. ம.ஞானேந்திரகுமாரி (விஜி, கனடா) - 1 இலட்சம்
5. பி.பிறேமளகுமாரி (ராஜி, அவுஸ்திரேலியா) - 1 இலட்சம்
6. ச.சுந்தரேஸ்வரி (கனடா) - 1 இலட்சம்
7. வே.இராஜேந்திரன் (இலண்டன்) - 1 இலட்சம்
8. வே.இராஜகோபால் (இலண்டன்) - 1 இலட்சம்
9. வி.கேதீஸ்வரதாசன் குடும்பம் - 1 இலட்சம்
10. பு.ரவீந்திரன்(ரவி, இலண்டன்) - 1 இலட்சம்
11. ஆ.செந்தில்நாதன் (சுவிஸ்) - 1 இலட்சம்
12. பா.சோமசுந்தரம் (கிளிநொச்சி) - 50,000 ரூபா
13. ச.இராஜேஸ்வரி (ஜேர்மனி) - 50,000 ரூபா
14. செ.டர்முதா (கனடா) - 50,000 ரூபா
15. அ.ஜமுனா (இலண்டன்) - 50,000 ரூபா
16. இ.தமிழ்செல்வி (பிரான்ஸ்) - 50,000 ரூபா
17. ந.கலைச்செல்வி (பிரான்ஸ்) - 50,000 ரூபா
18. இராமச்சந்திரன் குடும்பம்(விக்கி) - 50,000 ரூபா

**மொத்தம்:** 1 650 000 (பதினாறு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) ரூபாய்கள்.



## காரை இந்துவில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வும் ஞாபகர்த்த பரிசுகளும்
## 11.07.2023

மருத்துவகலாநிதி வி.விஜயரத்தினம் அவர்களது முழுமையான அனுசரணையில் 11.07.2023 அன்று நடைபெற்ற பரிசளிப்பு தினத்தின்போது மருத்துவ கலாநிதி விஸ்வலிங்கம் விஜயரத்தினம் சிறப்பு விருதுகளாக தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையுள்ள மாணவர்களிற்கான பொதுத் தகமைத் திறன் விருதுகள், க.பொ.த.சாதாரணம், க.பொ.த.உயர்தரம் ஆகிய தேசியப் பரீட்சைகளில் சிறப்புச் சித்தி பெற்றோர்களிற்கான விருதுகள், பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களிற்கான விருதுகள், கல்விசாரா செயற்பாடுகளில் சாதனை ஏற்படுத்தியோருக்கான விருதுகள் ஆகியன வழங்கப்பட்ட அதேவேளை சிலர் முன்வந்து தமது அன்புக்குரியவர்களின் நினைவாக உதவிய ஞாபகார்த்தப் பரிசில்களும் வழங்கப்பட்டிருந்தன.

பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்களான திருமதி மனோன்மணி தம்பிராசா, திரு.திருமதி சச்சிதானந்தன் சுந்தரேஸ்வரி தம்பதியினர், திரு.கனக சிவகுமாரன் ஆகியோர் தமது அன்பக்குரியவர்களின் ஞாபகார்த்தமாக ரொக்கப் பரிசில்களை கடந்த பத்து ஆண்டுகளாக வழங்கி வருகின்றனர். அதேவேளை சங்கத்தின் முதன்மை அனுசரணையாளர்களுள் ஒருவரான தொழிலதிபர் திரு.மகாதேவன் பாலசுப்பிரமணியம் தமது ஆசிரியரின் நினைவாக சென்ற மூன்று ஆண்டுகளாக ரொக்கப் பரிசில்களை வழங்கி வருகின்றார். அத்துடன் கல்லூரியின் அதிபரான திரு.அ.ஜெகதீஸ்வரன் அவர்களும் ஜெர்மனியில் வதியும் திரு.அருள்முகன் சாயிபாபா, ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர் திரு.பிரேம்தாஸ்குமாரசிறீ, திருமதி வீரமனோகரி ஸ்டாலினா கோபிச்சந்திரன் ஆகியோ ரும் இம்முறை ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**அமரர் சின்னத்தம்பி தம்பிராசா ஞாபகார்த்தப் பரிசு**



காரை.இந்துவின் முன்னாள் உப-அதிபரும் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையினை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்களுள் ஒருவரும் சங்கத்தின் ஆரம்பகாலத் தலை - வருமாகிய அமரர் சின்னத்தம்பி தம்பிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரது மனைவியும் காரை இந்துவின் முன்னாள் ஆசிரியையுமாகிய திருமதி மனோன்மணி தம்பிராசா அவர்கள் வழங்கிய உதவியை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் A தர சித்தியைப் பெற்றுக்கொண்ட ஏழு மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.



**அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி ஞாபகார்த்தப் பரிசு**

முதலிகேணியடி, காரைநகரைச் சேர்ந்த அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி ஞாபகார்த்தமாக சங்கீதத்தில் அதிக ஈடுபாடு கொண்டுள்ளவர்களும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுமான அன்னாரது புதல்வனும் மருமகளும் ஆகிய திரு.திருமதி சச்சிதானந்தன் சுந்தரேஸ்வரி தம்பதியினர் வழங்கிய உதவியை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சங்கீத பாடத்தில் A தர சித்தியைப் பெற்ற இருவர் பெற்றுக்கொண்டனர்.



**அமரர் நாகமுத்து கனகசுந்தரம் ஞாபகார்த்தப் பரிசு**

காரை.இந்துவின் முன்னாள் ஆசிரியரும் கல்லூரி ப் பண்ணை இயற்றி இசையமைத்தவருமாகிய அமரர் நாகமுத்து கனகசுந்தரம் அவர்களது ஞாபகார்த்தமாக அன்னாரது புதல்வனும் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் உறுப்பினருமாகிய திரு.கனக சிவகுமாரன் வழங்கிய உதவியை சென்ற கல்வியாண்டின் சிறந்த மாணவி ஒருவர் பெற்றுக்கொண்டார்.



**அமரர் சிதம்பரம் குமாரவேலு ஞாபகார்த்தப் பரிசு**

பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் முதன்மை அனுசரணையாளர்களுள் ஒருவரான தொழிலதிபர் திரு.மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்கள் தனது ஆசிரியரான அமரர் சிதம்பரம் குமாரவேலு ஞாபகார்த்தமாக நிரந்தர வைப்பிலிட்டு ஏற்படுத்திய உதவித்திட்டம் ஊடாக வழங்கிய ரொக்கப் பரிசிலை க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் பாடங்களில் யு தரத்தில் சித்தியடைந்த இருபது மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

(மேலும் அடுத்த பக்கம் பார்க்க...)

## அமரர் அஞ்சனாதேவி வைரமுத்து ஞாபகார்த்தப் பரிசு



காரைஇந்துவின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரிரை-யயுமாகிய அமரர் அஞ்சனாதேவி வைரமுத்து ஞாபகார்த்தமாக அன்னாரது பெறாமகனும் கல்லூ ரியின் அதிபருமாகிய திரு.அ.ெ ஜகதீஸ்வரன் அவர்கள் வழங்கிய உதவியை க.பொ.த.பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் A தர சித்தியைப் பெற்ற இரண்டு மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

## அமரர் அ.க.ந.விஜயரத்தினம் ஞாபகார்த்தப் பரிசு



பிரபல முன்னாள் ஆங்கில ஆசிரிய -ரான அமரர் அ.க.ந.விஜயரத்தினம் அவர்களது ஞாபகார்த்தமாக அன்னாரது புதல்வனான ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர் திரு.பிரேம்தாஸ்குமாரசிறீ அவர்கள் வழங்கிய உதவியை க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்திபெற்ற நான்கு மாணவர்கள் பெற்றக்கொண்டனர்.

## அமரர் விஜயரத்தினம் சிவயோகம் ஞாபகார்த்தப் பரிசு



முன்னாள் ஆங்கில ஆசிரியையும் ஓய்வுநிலை அதிபருமாகிய அமரர் வி ஜயரத்தினம் சிவயோகம் அவர்களது ஞாபகார்த்தமாக அன்னாரது புதல்வி திருமதி வீரமனோகரி ஸ்டாலினா கோபிச்சந்திரன் வழங்கிய உதவியை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் வரலாறு பாடத்தில் A தர சித்தியைப் பெற்ற நான்கு மாணவர்களும் தமிழ்மொழியில் A தர சித்தியைப் பெற்ற ஆறு மாணவர்களும் பெற்றுக்கொண்டனர்.

## அமரர் ஜோன் மனோகரன் கென்னடி ஞாபகார்த்தப் பரிசு



சிறந்த கல்விமானும் சமூகச் செயற்பாட்டாளர் அமரர் ஜோன் மனோகரன் கென்னடி அவர்களது ஞாபகார்த்தமாக அன்னாரது சகோதரன திரு.அருள்முகன் சாயிபாபா வழங்கிய உதவியை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் A தர சித்தியைப் பெற்ற இருவர் பெற்றுக் கொண்டனர்.

### காரை இந்துவின் கனடா கிளையின் பழைய மாணவர் சங்க செயலாளரின் சேவையினை பாராட்டி பெரியமணல் சிவகௌரி அமைப்புக்கள் கௌரவம்

காரைநகரின் பெரியமணல் குறிச்சியில் பல சமூக அமைப்புக்கள் மிகுந்த வினைத்திறனுடன் பணியாற்றி இப்பகுதி மக்களின் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றி வருகின்றன. இவ் அமைப்புக்கள் சமூக அக்கறைகொண்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற பல தன்னலமற்ற செயற்பாட்டாளர்களை கொண்டு விளங்குவனவாகும். காரை மண்ணின் சேவையாளர்களை இனம்கண்டு அவர்களை கௌரவித்து வருகின்ற இவ்வமைப்புக்களின் பணி விதந்து போற்றுதற்குரியதாகும். அந்தவகையில் தனிப்பட்ட பயணத்தினை மேற்கோண்டு காரைநகர் சென்றிருந்த காரை இந்து பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் செயலாளரும், கனடா காரை கலாசார மன்றத்தின் உப-தலைவருமாகிய திரு.கனக சிவகுமாரன் அவர்கள் ஊர்ப்பணி சார்ந்த சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அத்திபுரம் கந்தசுவாமி கோயிலில் கனக சிவகுமாரன் அவர்களிற்கான கௌரவம் வழங்கப்பட்டிருந்தது. "காரை.இந்துவின் முத்து" என்ற விரு-தினை வழங்கி பாராட்டி வாழ்த்துகின்ற பாராட்டுப்பாமாலை தேசிய விருதிற்கு சொந்தக்காரரான "காரையூர்க் கவிஞர்" வடிவேலு வடிவழை கையன் அவர்களினால் இயற்றப்பட்டு வாசிக்கப்பட்டிருந்ததுடன் இப்பாராட்டுப் பாமாலையினை இவருடன் இணைந்து காரை அபிவிருத்திச் சபையின் முன்னாள் செயலாளரும், சிறந்த சமூகச் செயற்பாட்டாளருமாகிய திரு.க.நாகராசா, காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி தவமணி பரமானந்தம் ஆகியோர் கனக சிவகுமாரனிடம் கையளித்திருந்தனர்.







**காரை இந்து மைதானத்திற்கு பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையில் சுற்று மதில்**

மைதானத்தின் சுற்று மதிலுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு 13-06-2023 புதன்கிழமை காலை கல்லூரியின் அதிபர் திரு.அ.ஜெகதீஸ்வரன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் பொருளாளர் திரு.இ.தர்சன் நேரடியாக கலந்து கொள்ள, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், வலயக் கல்வி அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளைளின் செயலாளர், உதவிச் செயலாளர் ஆகியோர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மதிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அமரர் கே.கே.நடராசா அதிபராக இருந்த காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கல்லூரியின் வெள்ளிவிழா அதிபருமாகிய அமரர் தியாகராசா அவர்களினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து காரைநகர் கல்லூரி மைதானத்தின் சுற்று மதில் அமைக்கப்பட்டிருந்தது. ஐம்பது ஆண்டுகள் பழைமை மிக்க இச்சுற்று மதில் இடிந்து வீழ்ந்துள்ள நிலையில் புதிதாக சுற்று மதில் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறித்தி கல்லூரிச் சமூகத்தினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்துள்ளது.

இக்கோரிக்கையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து கொண்ட பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தினர் சுற்று மதில் அமைப்பதற்கான நிதி உதவியை வழங்க முன்வந்திருந்தது. மைதானத்தின் கிழக்கு, தெற்கு எல்லைகளில் முழுமையாகவும் மேற்கு எல்லையின் ஒரு பகுதியில் மதில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள நிலையில் மிகுதிப் பகுதியிலுமே இச்சுற்று மதில் அமைக்கப்படவுள்ளது. இம்மதிலினை அமைப்பதற்கான எல்லைகள் பிரதேச சபையின் விதிகளுக்கு அமைய நிர்ணயம் செய்யப்பட்டு பிரதேச சபையின் முறையான அனுமதியும் கல்விப் பகுதியின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.









**சுப்பிரமணிய வித்தியாசாலையிலிருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஆறு மாணவர்கள் நாகேஸ்வரி நற்பணியகத்தின் அனுசரணையில் பாராட்டி மதிப்பு அளிக்கப்பட்டனர்.**



காரைநகர் புதுறோட்டை சேர்ந்த பரமநாதர் நாகேஸ்வரி அவர்களை நினைவு கூரும் வகையில் அன்னா ரது குடும்பத்தினரால் அன்னா ரது பெயரில் உருவாக்கப்பட்டதே நாகேஸ்வரி நற்பணியகம் என்ற சேவை அமைப்பாகும். இவ்வமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நற்சேவைகள் வரிசையில் சுப்பிரமணிய வித்தியாசாலையிலிருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற ஆறு மாணவர்களையும் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்விற்கான பூரண அனுசரணை வழங்கப்பட்டிருந்தது.

43 ஆண்டுகளாக (01-04-1971 – 01-01-2012) காரைநகர் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவாக இயங்கி வந்ததும் அதன் ஊட்டப்பாடசாலைகளில் ஒன்றாக விளங்குவதுமாகிய சுப்பிரமணிய வித்தியாசாலையின் பழைய மாணவியாகிய அமரர் நாகேஸ்வரி பரமநாதர் அவர்களை நினைவுகூரும் வகையில் குறித்த பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டு பாடசாலையின் அதிபர் திரு.குலதீபன் அவர்களின் தலைமையில் வெகுசிறப்பாக 17-05-2023 அன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றிருந்தது.

யாழ்ற்ரன் கல்லூரியின் முன்னாள் அதிபரும் சமய, சமூகச் செயற்பாட்டாளருமாகிய திரு.வே.முருகமூர்த்தி அவர்கள் பிரதம விருந்தினராகவும், தீவக வலயத்தின் ஆரம்பப் பிரிவு சேவைக்கால ஆலோசகர் திரு.கிருபாகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் அமரர் நாகேஸ்வரி அவர்களின் புதல்வர்களுள் ஒருவரான திரு.பரமநாதர் சிவசுப்பிரமணியம் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

புலமைப் பரிசல் பரீட்சையில் சித்தியடைந்த ஆறு மாணவர்களிற்கும் துவிச்சக்கர வண்டிகளும் 100 மதிப்பெண்களிற்கு மேல் பெற்ற மாணவர்களிற்கு பரிசில்களும் வழங்கி ஊக்குவிக்கப்பட்ட அதேவேளை இவர்களைக் கற்பித்த அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் பரிசல்கள் வழங்கப்பெற்று மதிப்பளிக்கப்பட்டிருந்தனர். இந்த பாராட்டு நிகழ்வினை ஆண்டுதோறும் தொடர்ந்து நடாத்துவதற்கான அனுசரணையினை வழங்கி உதவ நாகேஸ்வரி நற்பணியகம் முன்வந்துள்ளமை குறிப்படத்தக்கதாகும்.



**2023ம் ஆண்டுக்கான 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் வலந்தலை தெற்கு(அப்புத்துரை) அ.மி.த.க.பாடசாலையில் இருந்து 6 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளிற்கு மேல் பெற்று சித்தியடைந்தனர்**



முரளிதாஸ்
அபினாஸ்
170 புள்ளிகள்



விக்கினேஸ்வரன்
ஹர்ஷினி
167 புள்ளிகள்



கருணாகரன்
அபிராமி
160 புள்ளிகள்



கணேசமூர்த்தி
சுகந்தன்
158 புள்ளிகள்



கனகேஸ்வரன்
கேஷனா
154 புள்ளிகள்



யோகலிங்கம்
திலக்சனா
150 புள்ளிகள்

**வலந்தலை வடக்கு(சடையாளி) அ.மி.த.க.பாடசாலை**



கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர் திருமதி. சியாமளா செல்வானந்தராசா அவர்களுடன் ஆரணி



பவானந்தராசா ஆரணி
156 புள்ளிகள்



காரைநகரில் தற்போது இயங்கிவரும் 11 ஆரம்ப பள்ளிகளில் இருந்து 16 மாணவ மாணவிகள் 2023 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளில் வெட்டுப்புள்ளிகளிற்கு மேல் பெற்று சித்தியடைந்திருந்தனர்.
கடந்த 10 ஆண்டுகளில் காரைநகர் பாடசாலைகளில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவ மாணவிகளின் புகைப்படங்களுடன் 'எனது ஊர் காரைநகர்' சஞ்சிகையில் விபரங்கள் வெளியிடப்பட்டு வந்த போதிலும் இந்த வருடம் மற்றைய பாடசாலைகளில் இருந்து விபரங்களை பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சிகள் உரிய நேரத்தில் பலனளிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## காரை இந்துக்கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள்

காரைநகர் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று 2022ம் ஆண்டு க.பொ.த.உயர்தர பரீட்சையெழுதி பல்கலைக்கழகம் செல்ல ஆறு மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். அத்துடன் மேலும் சில மாணவர்கள் காத்திருப்போர் பட்டியலில் இருந்து பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அதிபர் அவர்கள் தெரிவித்துள்ளார். அத்துடன் நீண்ட பல கால இடைவெளிக்கு பின்னர் செல்வி விஜயகுமார் கஜந்தினி கணித பாட துறைக்கு களனி பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டார்.

| இல | மாணவர் பெயர் | துறை | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|
| 1 | செல்வி விஜயகுமார் கஜந்தினி | கணித பிரிவு | களனி பல்கலைக்கழகம் |
| 2 | செல்வி விஜயகுமாரன் றொஷானி | தொழில்நுட்ப பிரிவு | ராஜட்ட பல்கலைக்கழகம் |
| 3 | செல்வி கணேசமூர்த்தி லோஜினி | தொழில்நுட்ப பிரிவு | கிழக்க பல்கலைக்கழகம் |
| 4 | செல்வி மதியழகன் அபிதா | வர்த்தக பிரிவு | தென்கிழக்கு பல்கலைக்கழகம் |
| 5 | செல்வன் ரவிச்சந்திரன் ராகுலன் | தொழில்நுட்ப பிரிவ | வவுனியா பல்கலைக்கழகம் |
| 6 | செல்வி மோ.ரதிஷா | தொழில்நுட்ப பிரிவு | கிழக்கு பல்கலைக்கழகம் |

## காரைநகர் கல்விக்கோட்ட முன்பள்ளி குழந்தைகளின் கலைவிழாவும் ஆசிரியர் கௌரவிப்ப நிகழ்வும் சக்தி இலவசக்கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் 21.11.2023 அன்று நடைபெற்றது

காரைநகரில் இயங்கிவரும் 14 முன்பள்ளிகளில் 409 பிள்ளைகள் இணைந்துள்ளார்கள். இவர்களிற்கு கல்வி கற்பிக்க 36 முன்பள்ளி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். காரைநகர் முன்பள்ளிகளின் வளர்ச்சியில் சக்தி இலவசக்கல்வி நிலையம் இலண்டன் வாழ் காரை வர்த்தகர் திரு.நாகலிங்கம் இந்திரன் அவர்களது அனுசரணையோடு பல வழிகளிலும் பல மில்லியன் ரூபா செலவில் அத்தியாவசிய அடிப்படை தேவைகளை நிறைவு செய்து வருகின்றது. தீவக உதவி கல்விப்பணிப்பாளர் திரு.சிவசுப்பிரமணியம் பவானந்தன் தலைமையில் 21.11.2023 அன்று சக்கி இலவச கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையோடு வலந்தலையில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் முன்பள்ளி குழந்தைகளின் கலைவிழாவும் ஆசிரியர்களிற்கான கௌரவிப்பும் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தீவக வலய கல்வி பணிப்பாளர் திரு.திருஞானசம்பந்தப்பிள்ளை ஞானசுந்தரன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக சக்தி இலவசக்கல்வி சட்ட ஆலோசகர் திருமதி.சுஜிந்திரன் சாருஜா, திருமதி நாகலிங்கம் பராசக்தி, செல்வி செல்வராசா கேசினி அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.









# கனடா காரை கலாசார மன்றத்தின் 2023 ம் ஆண்டுக்கான செயற்பாடுகள்

கனடா காரை கலாசார மன்றத்தின் தற்போதைய நிர்வாக சபை 29.09.2022 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது திரு.சிவசம்பு சிவநாதன் அவர்களை தலைவராகவும், திருமதி.நாகேஸ்வரி சிவகுமாரன் அவர்களை செயலாளரா கவும், திரு.சோமசுந்தரம் கிருஸ்ணரட்ணம் அவர்களை பொருளாளரா கவும் கொண்டு தெரிவு செய்யப்பட்டதாகும்.

கோவிட் பெருந்தொற்றுக்கு பின்னர் தெரிவு செய்யப்பட்ட திரு.சிவசம்பு சிவநாதன் தலைமையிலான நிர்வாக சபை கடந்த ஒரு வருடத்திற்கு மேலான காலத்தில் கனடாவில் காரைநகர் மக்களிற்காக மன்றத்தின் வழமையான செயற்பாடுகள் அனைத்தையும் செவ்வனே நிறைவேற்றியுள்ளதுடன், கனடா வாழ் காரை மக்களிடத்தே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர்களின் இடைவிடாத மன்றத்திற்கான பணிகள் மூலமும் கனடா காரை கலாசார மன்றத்தின் அபிமானிகள் ஊடாகவும் 29.09.2022 முதல் காரைநகர் மண்ணிற்கான பல்வேறுபட்ட செயற்பாடுகளும் கல்விக்கான உதவிகளும் பல இலட்சம் ரூபாய்கள் செலவில் நிறைவேற்றியதுடன் கடந்தகால தொடர் செயற்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் என்பவற்றையும் தீர்மானித்து செயற்பட்டு வருகின்றது.



**நிர்வாக சபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு:**

தலைவர்: திரு.சிவசம்பு சிவநாதன்
உபதலைவர்: கனக சிவகுமாரன்
செயலாளர்: திருமதி நாகேஸ்வரி சிவகுமார்
உதவிச் செயலாளர்: திரு.தம்பிராசா ஜெயச்சந்திரன்
பொருளாளர்: திரு.சோமசுந்தரம் கிருஸ்ணரட்ணம்

**நிர்வாக உறுப்பினர்கள்:**

1). திரு.தம்பிஜயா பரமானந்தராசா
2). திருமதி ஞானாம்பிகை குணரத்தினம்
3). திரு.பிரமேந்திரதீசன் திரவியநாதன்
4).திரு .மனோகரன் அரியரத்தினம்
5). செல்வி சகானா குணரத்தினம் (இளையோர் ஒருங்கிணைப்பாளர்)

**உள்ளக கணக்காய்வாளர்:**

திரு.பஞ்சலிங்கம் கந்தையா.

**திட்டமிடல் போசகர் சபை உறுப்பினர்கள்**

1). திரு.சபாரத்தினம் பாலச்சந்திரன்
2). திரு.சோமசுந்தரம் கணேசபிள்ளை
3). திரு.நற்குணம் பாலேந்திரன்.

கனடா காரை கலாசார மன்றத்தின் வழமையான செயற்பாடுகள் தவிர 2022.09.29 முதல் 31.12.2023 வரை குறிப்பிடத்தக்க பல்வேறு பயன்தரு செயற்பாடுகளை காரைநகர் மண்ணில் பல மில்லியன் ரூபா செலவில் நிறைவேற்றியுள்ளது. இதற்கான நிதியுதவியாக கனடா வாழ் காரைநகர் மக்கள் வளங்கி வரும் அன்பளிப்புக்கள் மற்றும் கனடா காரை கலாசார மன்றத்தின் கடந்தகால நிர்வாகங்களினால் கனடா காரை கலாசார மன்றத்தின் பெயரில் இலங்கையில் ஹட்டன் நாஷனல் வங்கியில் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ள 65 இலட்சம் ரூபாய்களில் இருந்து கிடைக்கப்பெறுகின்ற வங்கி வட்டியில் இருந்தும், மன்றத்தின் செயற்பாடுகள் ஊடாக கிடைக்கப்பெறுகின்ற வருவாயில் இருந்தும் பல்வேறு ஊரிற்கான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன.

கனடாவில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக கனடா காரை கலாசாரமன்ற மானது ஹட்டன் நாஷனல் வங்கியில் வங்கிக் கணக்கில் கனடா காரை கலாசார மன்றத்தின் வங்கிக் கணக்கு இருந்து வருகின்ற காரணத்தினா ல் இலங்கையில் ஹட்டன் நாஷனல் வங்கிக் கணக்கில் வைப்பில் இடப்பட்டுள்ள 65 இலட்சம் ரூபாய்களில் இருந்து கடந்த 6 ஆண்டுகளில் மிகக்குறைந்தளவிலான பணமே வட்டியாக பெறப்பட்டுள்ளது.

2015.05.05 அன்று கனடா காரை கலாசார மன்றத்தினால் அப்போதைய தலைவர் திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாக சபையினரால் ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்கள் காரைநகர் பாட-சாலைகளிற்காக காரைநகர் அபிவிருத்தி சபையின் முகதாவில் இடப்பட்ட நிதியானது கடந்த எட்டு ஆண்டுகளில் அண்ணளவாக ஒரு கோடி ரூபாய்கள் வரையான பணத்தினை காரைநகர் பாடசாலைகளிற்கு வட்டியாக கொடுத்து வந்துள்ளது. மீண்டும் 2016ம் ஆண்டு திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாகம் விட்டுச்சென்ற 25,000 டொலர்கள்( அப்போதைய பெறுமதியில் 40 இலட்சம் ரூபாய்கள்) உட்பட தற்போது வைப்பில் இடப்பட்டுள்ள 65 இலட்சம் ரூபாய்கள் இதுவரை 10 இலட்சம் ரூபாய்கள் வரை மட்டுமே வட்டியாக கொடுத்துள்ளது.



செல்வி சகானா குணரத்தினம்
இளையோர் ஒருங்கிணைப்பாளர்

2015ம் ஆண்டு திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமையிலான

நிர்வாக சபை காரைநகர் பாடசாலைகளிற்காக வைப்பில் இட்ட ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களில் 25 இலட்சம் ரூபாய்கள் வரையான நிதி ஏற்கெனவே கனடா காரை கலாசார மன்றத்தின் நிதியாக ஹட்டன் நாஷனல் வங்கியில் மிகக்குறைந்தளவிலான வட்டியை பெற்றுக்கொண்டிருந்தது, ஆனாலும் 2016ம் ஆண்டில் பாடசாலைகள் நிரந்தர வைப்பிற்கு பின்னர் மீண்டும் நிர்வாகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திரு.தம்பிஜயா பரமானந்தராசா தலைமையிலான நிர்வாகம் 40 இலட்சம் ரூபாய்கள் வரையான நிதியினை அதே ஹட்டன் நாஷனல் வங்கியில் நிரந்தர வைப்புக்காக விட்டுச்சென்றதும் பின்னர் 2017இல் தெரிவான திரு.பாலச்சந்திரன் சபாரத்தினம் தலைமையிலான நிர்வாகம் 2017 முதல் 2019 வரையான பெறப்பட்ட நிதி என்பனவும் சேர்த்து மொத்தம் 65 இலட்சம் ரூபாய்களாக வைப்பில் தற்போது இருப்பதும் கனடாவில் கனடா காரை கலாசார மன்றத்தின் பாடசாலைகள் நிரந்தர வைப்பிற்கு எதிராக செயற்படும் அறிவாளிகள் சிலரும் தெரிந்து கொள்ள வேண்டியது.

அது மட்டுமன்றி ஊரிற்காக மண்ணிற்காகவென கனடாவில் கனடா காரை கலாசார மன்றத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்வுகளில் இருந்து இலாபமாக பெறப்பட்ட 65 இலட்சம் ரூபாய்களே இலங்கையில் கனடா காரை கலாசார மன்றத்தின் பெயரில் ஹட்டன் நாஷனல் வங்கியில் இருப்பதும், அதனால் மிகக்குறைந்தளவிலான வட்டியும் வெளிநாட்டு நிறுவனத்திற்காக மேலதிக வரியும் வசூலிக்கப்படுவதால் நிரந்தர வைப்பில் உள்ள 65 இலட்சம் ரூபாய்களில் இருந்து மிகக்குறைந்தளவிலான பயனையே காரை மண் பெற்று வருகின்றது என்பதும் கணக்கியல் தெரிந்த வல்லுனர்கள் கனடா காரை கலாசார மன்றத்திற்கு வழங்க வேண்டிய அறிவுரைகளாகும்.



காரைநகர் அபிவிருத்தி சபை இன்று பல கோடி ரூபாய்களிற்கு பொறுப்பானதாகவும் அந்த அமைப்பில் கல்வியாளர்கள், வர்த்தகர்கள், அரசியல்வாதிகள், புகழ்பூத்த வல்லுனர்கள் நிர்வாக சபையினை அலங்கரித்து வந்தாலும், வருடந்தோறும் செவ்வனே பட்டய கணக்காளர்களால் உறுதிப்படுத்தப்பட்டளவில் வரவு செலவு அறிக்கைகள் வெளியிடப்படுகின்ற போதிலும், காரைநகர் பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவினால் காரைநகர் அபிவிருத்தி சபையின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்ற போதிலும், இவை தவிர இலண்டன் காரை நலன்புரிச் சங்கத்தினாலும், பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தினாலும், பல மில்லியன் ரூபாய்கள் காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரில் நிரந்தர வைப்பில் இடப்பட்டு அதன் மூலம் பெறப்படுகின்ற வட்டிப்பணம் கடந்த பல ஆண்டுகளாக ஊர் பயன்பாட்டிற்காக பெறப்பட்டு அதற்கான பதிவுகள் தெளிவாக காரைநகர் அபிவிருத்தி சபை வரவு செலவு அறிக்கைகளில் பத்திரமாக இருந்து வருகின்ற போதிலும் கனடா காரை கலாசார மன்றமானது 65 இலட்சம் ரூபாய்களை நம்பிக்கையற்ற வகையில் மன்றத்தின் பெயரிலே உள்ள ஹட்டன் நாஷனல் வங்கிக் கணக்கில் தான் வைத்திருக்கும் என்கின்ற முடிவை கடந்த ஐந்து ஆண்டுகளாக கொண்டுவருகின்றது. மன்றத்தின் அனைத்து செலவுகளும் போக மண்ணிற்காக வழங்கப்பட வேண்டிய மிச்ச நிதியிலும் இன்னமும் மன்றமே தனது பெயர் பதிக்கவெண்ணுவது மட்டுமல்லாது காரைநகர் அபிவிருத்தி சபை மீது நம்பிக்கையற்ற வகையில் செயற்பட்டு வருவது அடுத்துவரும்பொதுக்கூட்டங்களில் கனடா வாழ் மன்ற அங்கத்தவர்கள் தீர்மானிக்கவேண்டியவர்களாகின்றனர்.



கனடா காரை கலாசார மன்றத்தின் தற்போதைய திரு.சிவசம்பு சிவநாதன் தலைமையிலான நிர்வாக சபையினரால் மன்றத்திற்கான செயற்பாடு, மண்ணிற்கான செயற்பாடுகள் தவிர்ந்து தனிப்பட்ட ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விதண்டாவாத செயற்பாடான சட்ட நடவடிக்கையினையும் எதிர்கொண்டு வருகின்றது. ஊரிற்கும் மண்ணிற்கும் மக்களிற்கும், நாட்டிற்கும், குடும்பத்திற்கும் கூட பயனற்ற வாழ்வு வாழும் ஒரு சிலர் தாம் கற்ற கல்வியினால் எவருக்குமே பயனளிக்க முடியாத நிலையில் பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்களை துன்புறுத்தி வருவதுடன், மற்றையவர்களையும் அதனூடாக பயமுறுத்தி தமது மிலேச்சத்தனமான செயற்பாடுகளை இருட்டில் அரங்கேற்றி வருகின்றனர்.



கனடா காரை கலாசார மன்றம் சார்ந்து, காரைநகர் பொதுப்பணி சார்ந்து இயங்கி வரும் நிர்வாகங்களினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு மக்கள் அபிப்பிராயங்களை செவிமடுக்கவும் அதனை ஏற்று செயற்படவும் தகுதியற்றவர்கள் தமது சொந்த இச்சைகளை நிறைவேற்ற பலவழிகளிலும் பொதுப்பணியாளர்களை அச்சுறுத்தி

வருகின்றார்கள் என்பது கனடாவிலும் சரி, காரை நகரிலும் சரி நடைபெற்று வருவதும், அதனையும் ஏற்று தாம் பிறந்த மண்ணிற்கும் மக்களிற்கும் பெரும்பணி ஆற்றி வருகின்றார்கள். அந்த வகையில் கனடா காரை கலாசார மன்றம் கோவிட் பெருந்தொற்று மற்றும் இதுபோன்ற பயனற்ற வீணர்களின் விதண்டாவாதங்களிற்கு மத்தியிலும் ஊரிற்கான பணியினை பொதுப்பணியாக ஊர் மக்களின் கருத்துக்களை செவிமடுத்து ஜனநாயகரீதியில்
செயற்படுவது இன்றைய காலத்தின் கட்டாயமும் மண்ணின் மீது கொண்ட பற்றும் ஆகும். கனடா காரை கலாசார மன்றம் ஆனை பலம் கொண்ட கனடா காரை மக்களின் பொது அமைப்பாகும். அதன் உண்மைத்தன்மையினை உணர்ந்து கொண்டு ஊரில்
இருந்து இடம்பெயர்ந்து முதலாவது சந்ததியாக வாழ்ந்து வரும் எம்மவர்கள் கனடா காரை கலாசார மன்றத்தின் நிர்வாகத்திற்கு என்றென்றும் பக்க பலமாக விளங்கிடுவோம்.

**2023ம் ஆண்டில் கனடா காரை கலாசார மன்றம் காரைநகர் மண்ணில் நிறைவேற்றிய குறிப்பிடத்தக்க செயற்பாடுகளாவன:**

காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்தில் பணியாற்றும் உதவியாளருக்கு மாதாந்தம் ஒருபகுதி கொடுப்பனவை கனடா காரை கலாசார மன்றம் வழங்கி வருகின்றது. அத்துடன் அங்கே மாணவர் பயன்பாட்டில் உள்ள இரண்டு போட்டோ பிரதி இயந்திரங்களிற்கான பேப்பர் மற்றும் ரோணர்களை வழங்கி வருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆண்டு தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கருத்தரங்கு மற்றும் தரம் 10 க.பொ.த பரீட்சைக்கான கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.

காரைநகரை சேர்ந்த 9 பல்கலைக்கழக மாணவர்களிற்கு கற்றல் உதவியாக மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காரைநகர் வைத்தியசாலைக்கு நாலு இலட்சத்து பதினைந்தாயிரம் ரூபா செலவில் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பெற்றுக்கொள்ள வழங்கப்பட்டது.

காரைநகர் அபிவிருத்தி சபையினால் கொண்டாடப்பட்ட 'காரைநகர்' நூற்றாண்டு விழாவிற்கு அனுசரணையாக இரண்டு இலட்சம் ரூபாய்கள் வழங்கப்பட்டன.

ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலைக்கு அத்தியாவசிய நீர் பாவனைக்காக மோட்டார் இயந்திரம் வாங்கிக் கொடுக்கப்பட்டதுடன் அதற்கான அறையும் கட்டிக்கொடுக்கப்பட்டது.

மேலும் 02.12.2023 அன்று நடைபெற்ற 'காரை வசந்தம் 2023' மூலம் பெறப்படும் நிதியில் இருந்து வியாவில் சைவவித்தியாலயத்திற்கு சமையல்யறை கூடம் ஆறு இலட்சம் ரூபா செலவிலும், சுப்பிரமணியம் வித்தியாசாலைக்கு இரண்டு வகுப்பறை கட்டிடங்களிற்கு பாதுகாப்பு மற்றும் செப்பனிடல் பணிக்காக ஆறு இலட்சம் ருபாய்களும் வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டதுடன், அவற்றில் ஒரு தொகுதி நிதியுதவி காரை வசந்தம் நிகழ்விற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கனடா காரை கலாசார மன்றத்தின் திரு.சிவசம்பு சிவநாதன் தலைமையிலான நிர்வாகம் தொடர்ச்சியாக தேவையேற்படும் போதெல்லாம் நிர்வாக சபையினை கூட்டி நிர்வாக சபை உறுப்பினர்களின் கருத்துக்களிற்கு அமைய மன்றத்தின் செயற்பாடுகளை தீர்மானித்து வருவதும் ஆர்வமுடன் மன்றத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதும் கனடா வாழ் காரைநகர் மக்கள் அறிந்து கொள்ளத்தக்கது.



கண்ணீர் அஞ்சலி
திரு.வெற்றிவேலு நடராசா

காரைநகர்.இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த கரிசனை கொண்டு பல்வேறு உதவிகளை வழங்கி வந்த காரை.இந்து அன்னையின் மைந்தனும் பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினருமாகிய திரு.வெற்றிவேலு நடராசா அவர்கள் 09.10.2023 அன்று சுகயீனம் காரணமாக சிவபதம் அடைந்தார்.

காரைநகர் வலந்தலையை சேர்ந்த இவர் 2014ஆம் ஆண்டு தமது குடும்பத்துடன் இணைந்து ஆறு பரப்புக் காணியினை கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கியவர்.
இதன் மூலம் கல்லூரியின் விளையாட்டு மைதானம் விரிவாக்கம் செய்ய வழியேற்பட்டது. அத்துடன் 2013ஆம் ஆண்டில் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள நீதியரசர் நடராசா, கலாநிதி ஆ.தியாகராசா அவர்களதும் திருவுருவப் படங்களை செப்பனிட்டு அழகியமுறையில் மாற்றியமைக்க உதவியதுடன் அரங்கில் தற்போது பாவனையிலுள்ள அழகிய நீல, சிவப்பு வர்ண திரைச்சேலைகளையும் வாங்கி உதவியவர்.

சீமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியரான இவர் காரைநகரில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றினை நிர்வகித்து வந்ததுடன் கற்பித்தல் பணியிலும் ஈடுபட்டவர். திரு.நடராசா அவர்களின் மறைவினால் ஆறாத்துயருற்றிருக்கும் அன்னாரது மனைவி, மகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

# காரைநகர் இந்து பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் 25வது ஆண்டு நிறைவு விழா 16.12.2023

காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை புனரமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு செய்யப்பட்ட வெள்ளி விழா 16.12.2023 அன்று மாலை கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் தொழிலதிபர் சிதம்பரப்பிள்ளை நேசேந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



காரை இந்துவின் பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் பெருந்திரளாகக் கலந்து கொண்ட இவ்விழாவில் தமிழகத்திலிருந்து வருகை தந்த பிரபல்யம் மிக்க பட்டிமன்றப் பேச்சாளரான 'சொல்லின்செல்வர்' P. மணிகண்டன் அவர்களது 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்றிருந்தது.



காரை.இந்துவின் அதிபர் திரு.அ.ஜெகதீஸ்வரன் அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு கல்லூ ரியின் அண்மைக் காலத்து சாதனைளை எடுத்துக் கூறியிருந்ததுடன் கல்லூரியின் முக்கியமான தேவைகளையும் சிறப்பாக சயம்பு நினைவு மண்டபத்தில் ஏற்பட்டுள்ள பாரிய சேதம் திருத்தியமைக்கப்பட வேண்டிய தன் அவசியத்தைக் குறிப்பிட்டு உரையாற்றினார். கல்லூரி விளையாட்டு மைதானத்தின் எல்லைகளில் சுற்று மதில்கள் அமைப்பதற்கான பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தி னரின் உதவி, இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட மாடிக்கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு 1973 இல் பிறந்து பொன்னகவையினை நிறைவுசெய்த கல்லூரியின் பழைய மாணவர்கள் இணைந்து வழங்குகின்ற உதவி என்பவற்றை தனது உரையின் போது குறிப்பிட்டதுடன் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு பழைய மாணவர்



சங்கத்தின் கனடாக் கிளை வழங்கி வருகின்ற பாரிய பங்களிப்பின் முக்கியத்துவத்தினையும் முன்னு - தாரணத்தினையும் எடுத்துக் கூறியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவி ன் மேலதிகச் செயலாளரான திரு.இ.இளங்கோவன் இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியதுடன் சிறப்புக் கௌரவங்களையும் செய்திரு ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



காரை இந்துவின் பழைய மாணவனும் ஆன்மீகச் சொற்பொழிவாளரும் சைவத்தமிழ்ப் பணியிலும் சமூகப் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவருமாகிய 'சைவ மணி ' சண்முகரத்தினம் அவர்களினால் மணிகண்டன் அவர்களுக்கு ' மணிமொழி வாரிதி ' என்ற கௌரவ விருதும் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த கரிசனையுடன் பங்களித்து வருகின்ற கொழும்புக் கிளைத் தலைவர் திரு.சி.நேசேந்திரன் அவர்களுக்கு 'கல்வி அறக்கொடை வள்ளல்' என்ற கௌரவ விருதும் வழங்கப் பெற்று கௌரவிக்கப்பட்டிருந்தனர். அத்தோடு இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபனத்தில் பணியாற்றும் இராமச்சந்திரன் செந்தில்நாதன் அவர்கள் ' சமூக சஞ்சீவி ' என்ற விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார்.



கொழும்புக் கிளையின் செயலாளரும் ஸ்ரீலங்கா கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத் தின் ஓய்வுநிலைப் பணிப்பாளர் நாயகமுமாகி ய Dr..ஆறுமுகம் சிவசோதி அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்றியிருந்தார்.

கல்லூரியின் பழைய மாணவர்களான தினகரன் நாளிதழின் பிரதம ஆசிரியர் திரு.தேவதாசன் செந்திவேல், குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் முன்னாள் பிரதிக்கட்டுப்பாட்டாளரும் பொதுநிர்வாக அமைச்சின் உதவிச் செயலாளருமாகிய திரு.வேலுப்பிள்ளை தவராசா, கணக்காளர் குழந்தைவேலு அன்புச்செல்வன், முன்னாள் ஓய்வுநிலை ஆசிரியர்களான திரு.இ.தர்மராசா, திருமதி புஸ்பதேவி சிவசோதி, இசை ஆசிரியை திருமதி உமா சிவகுமார் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு.இளையதம்பி தயானந்தா, காரை.இந்துவின் ஆசிரியரும் தாய்ச் சங்கத்தின் பொருளாளருமாகிய

திரு.சுகந்தன்,மற்றும் கல்லூரியின் நலன் விரும்பிகளான நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருச்சிற்றம்பலம் விஸ்வரூபன், “ காரைக்கவி ” கந்தையா பத்மானந்தன் உள்ளிட்ட பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளரான திரு.செந்தூரன் அவர்களும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இ.செந்தில்நாதனும் நிகழ்வுகளை சிறப்பாகத் தொகுத்து வழங்கியிருந்தனர்.




### பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவிக்கு மடிக்கணணி அன்பளிப்பு

காரைநகர் இந்துக் கல்லூரியில் இருந்து கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு உயிரியல் முறைமை தொழில் நுட்ப பிரிவில் அனுமதி பெற்ற மாணவி செல்வி ஜென்சிகா தேவராசா அவர்களிற்கு கனடா காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உதவியோது கனடா பழைய மாணவர் சங்க உறுப்பினரும் வீடு விற்பனை மற்றும் அடமான வங்கிக் கடன் முகவருமான திரு.நடராசா ஜெயக்குமார் அவர்களின் பூரண அனுசரணையோடு மடிக்கணணி வழங்கப்பட்டது.


திரு.ந.ஜெயகுமார்

காரைநகர் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது அதிபர் மற்றும் முன்னாள் அதிபர் கலாபூஷணம் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களால் இக்கணணி வழங்கி வைக்கப்பட்டது.



### மாணவர் கல்வி மேம்பாட்டு உதவித்திட்டத்தின் கொடையாளர் திரு.பாலசுப்பிரமணியம் மகேஸ்வரன் அவர்களின் கல்லூரிக்கான பயணம்

காரைநகர் இந்துக் கல்லூரியின் கல்வித்தரம் உயர்வடைய வேண்டும் என்பதில் மிகுந்த கரிசனையுடன் பலவித உதவிகளை வழங்கி வருபவர் ஐக்கிய அமெரிக்காவில் பொறியியலாளராக பணியாற்றி வருபவருமான திரு.மகேஸ்வரன் பாலசுப்பிரமணியம் அவர்கள். ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து காரை இந்துவில் கல்வியை தொடரும் 49 மாணவர்களின் கற்றலுக்கான மாதாந்த உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்க திரு.மகேஸ்வரன் அவர்கள் முழுமையான உதவியை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



கடந்த மாதம் திரு.மகேஸ்வரன் அவர்கள் கல்லூரிக்கு சென்று அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை சந்தித்திருந்தார். கல்லூரியின் அதிபர் திரு.அ.ஜெகதீஸ் -வரன் அவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றார். திரு.மகேஸ்வரன் அவர்கள் மாணவர்களின் கற்றல் தொடர்பான அவர்களுக்கு பயனுள்ள விடயங்களை உள்ளகியதான சிறப்பு உரையினை ஆற்றியிருந்ததுடன் இரண்டாம் தவணை பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு ழிவஅைஅ சான்றிதள்களை வழங்கிவைத்து ஊக்குவித்தார்.



யா/காரைநகர் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்-கனடா
J/KARAINAGAR HINDU COLLEGE OLD STUDENTS ASSOCIATION - CANADA

செய்திகள்

## காரை இந்துவிற்கான ' மருத்துவ கலாநிதி வி . விஜயரத்தினம் நம்பிக்கை நிதியம் ' ஐந்து மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.



Dr.V.Vijayaratnam

காரை இந்துவின் கீர்த்தி மிக்க பழைய மாணவனான குழந்தைகள் மருத்துவநிபுணர் மருத்துவகலாநிதி விஸ்வலிங்கம் விஜயரத்தினம் அவர்கள் றொறன்ரோ, கனடாவில் நிபுணத்துவம் மிக்க குழந்தை மருத்துவராக சேவையாற்றி வருவதன் ஊடாகவும் இவரிடத்துக் காணப்படுகின்ற சமூக அக்கறை காரணமாகவும் காரைநகர் மக்கள் மத்தியில் மட்டுமல்லாது றொறன்ரோ வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவராக விளங்குபவர்.

காரை மண்ணினதும் காரை இந்துவினதும் புகழினை நிலைநாட்டி வருவரான Dr.விஜயரத்தினம் அவர்கள் இக்கல்லூரி மீது ஆழ்ந்த விசுவாசத்தினை கொண்டு விளங்குவதுடன் இக்கல்லூரியானது அனைத்து வளங்களையும் பெற்று சமூகத்துக்கான கல்விப் பணியினை தளராது ஆற்றவேண்டும் என்கின்ற ஆத்மார்த்தமான சிந்தனையுடன் செயற்பட்டு கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளுக்கு பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையின் ஊடாக பேருதவிகள் செய்து வருபவர். இவரது உதவிப் பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்ற உயரிய பணியாகவும் காரை இந்துவின் வரலாற்றில் இடம்பிடித்த பணியாகவும் அமைந்து விளங்குவது இவரால் 2015 ஆம் ஆண்டு இறுதியில் நிறுவப்பட்ட 'மருத்துவகலாநிதி வி.விஜயரத்தினம் நம்பிக்கை நிதியம்' ஆகும். 2016 யூலை, 2017 யூலை வரை படிப்படியாக 25 இலட்சம் ரூபாய்கள் வரை வைப்பில் இடப்பட்டதுடன் 2023 கடந்த செப்டெம்பர் மாதம் பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்த மருத்துவ கலாநிதி விஜயரத்தினம் அவர்கள் இந்த நிதியத்தினை 50 இலட்சம் ரூபாய்கள் வரை அதிகரிக்கும் வகையில் நிதியுதவியினை வழங்கியுள்ளார்.



கல்விச் சமூகத்தினது ஏகோபித்த அங்கீகாரத்தினைப் பெற்றதும் மாணவர்களது கல்விச் செயற்பாட்டில் தாக்கம் செலுத்த வல்லதுமான கல்லூரியின் மிக முக்கியமான வருடாந்த நிகழ்வான பரிசில் தினத்தினது முக்கியத்துவத்தினை உணர்ந்துகொண்ட மருத்துவகலாநிதி வி ஜயரத்தினம் அவர்கள் இந்நிகழ்வானது தங்குதடையின்றி தொடர்ந்து நடாத்தப்படவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவராக இந்நிகழ்விற்கு உதவும் அடிப்படையான நோக்குடனேயே குறித்த நிதியத்தினை நிறுவியிருந்தார். ஒன்றரை மில்லியன் ரூபா வங்கியில் வைப்பிலிடப்பட்டு தொடங்கப்பெற்ற இந்நிதியத்தின் வைப்பு தொகை காலத்திற்குக்காலம் மருத்துவகலாநிதி வி.விஜயரத்தினம் அவர்களின் உதவியுடன் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்நிதியத்திலிருந்து பெறப்படுகின்ற வட்டித்தொகையிலிருந்து வருடாந்த பரிசில் தினத்திற்கு ஏற்படும் செலவு ஈடுசெய்யப்பட்ட பின்னர் மீதியிருக்குமானால் கல்லூரியின் வேறு தேவைகளிற்கு பயன்படுத்த முடியும் என்றவாறு நிதியத்தின் சட்ட ஆவணத்தில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மாணவர்களின் ஆளுமை விருத்தியில் தாக்கம் செலுத்த வல்ல மற்றொரு முக்கியமான நிகழ்வான வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கான உதவியும் 2019 ஆம் ஆண்டிலிருந்து இந்நிதியத்திலிருந்து பெறப்பட்டு வருகின்றமையும் சிறப்பாக குறிப்பிடத்தக்கதாகும்.




கனடா காரை கலாசார மன்றத்தினரால் 2015.05.05 அன்று காரைநகர் பாடசாலைகள் அனைத்திற்குமாக நிரந்தர வைப்பில் இடப்பட்ட ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களிற்கு அடுத்ததாக காரைநகரில் அதிக வைப்புத்தொகையினைக் கொண்டு விளங்குகின்றது என்கின்ற பெருமையைப் பெற்று விளங்குகின்றதும் வரலாற்று உதவித் திட்டமாகக் கருதப்படக்கூடியதுமான இந்நிதியத்தினை நிறுவியதுடன் மட்டுமல்லாது அதன் வைப்புத்தொகையினை அதிகரிக்க பேருதவி புரிந்து வருகின்ற மருத்தவகலாநிதி வி.விஜயரத்தினம் அவர்களின் அரும்பணியினைப் பாராட்டி உளமார்ந்த நன்றியினையும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் அதிபர் திரு.அ.ஜெகதீஸ்வரன் அவர்கள் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று காரை இந்துவில் கல்வி பயிலும் 12 மாணவர்களிற்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன




2022 ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று ஆறாம் தரத்தில் பயில காரை இந்துவில் சேர்ந்து கொண்ட 12 மாணவர்களில் நாகேஸ்வரி நற்பணியகத்தின் அனுசரணையில் ஆறு மாணவர்களுக்கும் ' எனது ஊர் காரைநகர் ' தொகுப்பாளர் தீசன் திரவியநாதன் அவர்களினால் ஒரு மாணவனுக்கும் என ஏழு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்ட நிலையில் மீதமாகவுள்ள ஐந்து மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி உதவுமாறு பழைய மாணவர் சங்க கனடாக் கிளையினை அதிபர் திரு.அ.ஜெகதீஸ்வரன் அவர்கள் வேண்டிக்கொண்டார்.



இச்சங்கத்தினர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக காரை.இந்துவின் பழைய மாணவனும் பழைய மாணவர் சங்க கனடாக் கிளைக்கு அவ்வப்போது உதவி ஆதரவளித்து வருபவருமாகிய சுவிற்சலாந்து, Bern, Siva Travel அதிபர் திரு.சிவா கனகசுந்தரம் அவர்களது அனுசரணையில் ஐந்து மாணவர்களுக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. திரு.சிவா கனகசுந்தரம் அவர்கள் தனது தந்தையாரும் காரை இந்துவின் முன்னாள் ஆசிரியரும் ஆகிய அமரர் நாகமுத்து கனகசுந்தரம், தாயாரான சுப்பிரமணிய வித்தியாசாலையின் முன்னாள் ஆசிரியை அமரர் இராசம்மா கனகசுந்தரம் (தையலம்மா) ஆகியோரது ஞாபகார்த்தமாக இத்துவிச்சக்கரவண்டிகளை வழங்கியிருந்தார்.

துவிச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் திரு.அ.ஜெகதீஸ்வரன் அவர்களின் தலைமையில் 25-07-2023 செவ்வாய்க்கிழமை நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஒய்வுநிலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூத்த ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி வீரமங்கை ஸ்டாலினா யோகரத்தினம் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இவர்கள் இருவரும் அமரர் கனகசுந்தரம், அமரர் இராசம்மா கனகசுந்தரம் ஆகிய இருவரதும் கல்விச் சேவையினை நினைவுகூர்ந்து உரையாற்றியதுடன் அவர்களது ஞாபகார்த்தமாக துவிச்சக்கரவண்டிகளை வழங்க முன்வந்த சிவா கனகசுந்தரத்தையும் பாராட்டி நன்றி கூறினர். அமரர்களது திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு சுடரேத்தப்பட்டு மலரஞ்சலியும் செய்யப்பட்டிருந்தது. பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் திரு.நிமலதாசன் கணபதிப்பிள்ளை அவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.






# ஒப்பற்ற சேவையாளர் அமரர் தில்லையம்பலம் விசுவலிங்கம்

- By கலாநிதி தம்பிராசா ரவிச்சந்திரன்

08.10.2023 அன்று கனடாவில் அமரத்துவம் அடைந்த தில்லையம்பலம் விசுவலிங்கம் அவர்கள் இளமைக் காலம் முதல் சைவத் தமிழ்ப் பற்றும் சமூக உணர்வும் கொண்டு விளங்கி எமது சமூகத்திற்கு சமய, சமூக, கல்வித் துறைகளில் பல அளப்பரிய பணிகளை ஆற்றி, தான் பிறந்த காரை.மண்ணுக்கு பெருமை சேர்த்த ஒரு பெருமகனார்.



அமரர் தில்லையம்பலம் விசுவலிங்கம்

அமரர் விசுவலிங்கம் அவர்கள் காரைநகர் வலந்தலையில் தில்லையம்பலம்-இராசம்மா தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக 16-12-1937 ல் பிறந்தார். அன்னார் தனது ஆரம்பக் கல்வியை இலகடி சைவத் தமிழக் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியிலும் பின்னர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து 1963ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரி (B.Sc.) பட்டம் பெற்றார். ஆராலி தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அதிபர் நாகலிங்கம்-முத்துமாரி தம்பதிகளின் புதல்வியாகிய வடிவழகாம்பாள் அவர்களை 1972ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். வுடிவழகாம்பாள் அவர்கள் தமது துணைவரது பணிகள் அனைத்திலும் உறுதுணையாக இருந்து செயலாற்றி வந்துள்ளார்.

**கல்விப் பணி**

அமரர் விசுவலிங்கம் அவர்கள் 1963ஆம் ஆண்டு குருநாகல் புனித ஆன்ஸ் கல்லூரியில் தனது ஆசிரியப் பணியை தொடங்கினார். பின்னர் கொழும்பு புனித பெனடிக்ஸ் கல்லூரி, யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றில் உயர்தர வகுப்புக்களுக்கு கணித, பௌதிகவியல் ஆசிரியராக பணியாற்றினார். இக்காலகட்டத்தில் இலங்கை, லண்டன் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இவர் எழுதி வெளியிட்ட காவிகள், தூய, பிரயோக கணித நூல்கள் மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் பெரு வரவேற்பைப் பெற்று பரவலாக பயன்படுத்தப்பட்டன.

இலங்கையில் ஆசிரியப் பணியைத் தொடர்ந்து 1980ம் ஆண்டு நைஜீரியாவில் போர்ணோ மாநிலத்தில் உள்ள கல்வி, விஞ்ஞான, தொழில்நுடப் கல்லூரியில் தலைமை விரிவுரையாளராக கடமை ஆற்றத் தொடங்கினார். இவர் நைஜீரியாவில் கடமையாற்றிய காலத்தில் I.J.M.B Special Mathematics Course in Vectors என்ற நூலையும் வெளியிட்டார்.



கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளராக ஆரம்பம் முதல் அமரத்துவம் அடையும் வரை பணியாற்றினார்

நைஜீரியாவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்ச் சிறார்களுக்கு சைவசமய, தமிழ் அறிவை ஊட்டியும், திருமுறைகளை பயிற்றுவித்தும், பாராயணம் செய்வித்தும் சைவ தமிழ் பாரம்பரியங்களை பேணி வளர்த்தார். அத்தோடு தைப்பொங்கல், சிவராத்திரி, வருடப்பிறப்பு, சரஸ்வதி பூசை, திருவெம்பாவை, திருவள்ளுவர் விழா, பாரதி விழா போன்ற விழாக்களையும். தனது வீட்டிலேயே எல்லோரையும் அழைத்து சிறப்புற நடாத்தினார்.

**கனடாவில் சைவத்தமிழ்ப் பணி**

விசுவலிங்கம் அவர்கள் நைஜீரியாவில் கடமையாற்றிய பின்னர் 1988ம் ஆண்டு தனது குடும்பத்தினருடன் கனடாவில் குடியேறினார். கனடாவில் வாழ்ந்த ஆரம்ப காலகட்டத்தில் தான் பிறந்த காரை மண்ணின் மேம்பாட்டிற்காக ஈழத்து சிதம்பர திருத்தொண்டர் சங்கத்தை தோற்றுவிப்பதற்கும் மற்றும் தான் கற்ற ஸ்கந்தவரோயா கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவ பழைய மாணவர் சங்கத்தை தோற்றுவிப்பதற்கும் அரும் பணியாற்றினார். தனது வாழ்நாளின் இறுதிக் காலத்தில் தான் கற்ற காரைநகர் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காக அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் போசகராக இருத்து பணியாற்றினார்.

இவர் ஆற்றிய சமூக, சமய, தமிழ்ப் பணிகளில் சிகரமாக விளங்குவது அன்னார் கனடா மிசிசாக நகரில் 1995ம் ஆண்டு சைவ சித்தாந்த மன்றத்தை நிறுவி அதை சார்ந்து 25 வருடங்களுக்கு மேலாக கனடா சைவத் தமிழ்ப்பரப்பில் ஆற்றிய அரும்பெரும் பணிகளாகும். புலம்பெயர்ந்த நாட்டில் வாழும் எமது இளம் தலைமுறையினருக்கு சைவத்தமிழப் பண்பாட்டு விழுமியங்களை கொண்டு சேர்ப்பதன் அவசியத்தை உணர்ந்த திரு.விசுவலிங்கம் அவர்கள்,

கனடா சைவ சிந்தாந்த மன்றத்தின் ஊடாக சைவ சமய குரவர் பாடசாலையை தனது துணைவியாரின் உதவியோ டும் மற்றும் மன்ற உறுப்பினர்களது ஒத்துழைப்போடும் நடாத்தி வந்தார். இளையோருக்கு சைவசமய வழிபாட்டு முறைகள், சமய அறிவு, திருமுறை பாராயணம், ஒழுக்க நெறிகள் என்பவற்றோடு எமது அருமைத் தாய் மொழியாம் தமிழினையும் இப்பாடசாலையில் கற்பித்து, சிறப்புறப் பணியாற்றினார். இப்பாடசாலையில் பயின்ற மாணவர்கள் கொழும்பு விவேகானந்தா சபை, யாழ்ப்பாண சைவபரிபால ன சபை என்பன நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சைக்கும், தமிழ்ப் பரீட்சைக்கும் பல ஆண்டுகளாக தோற்றச் செய்து சிறப்புச் சித்திகள் பெற வைத்ததன் மூலம் தனது பணியில் பெரு வெற்றியும் கண்டார்.

மாணவர்களிடத்தும் பெற்றோரிடத்தும் சைவசமய தமிழ்



ஈடுபாட்டை வளர்ப்பதற்காக சைவசமய குரவர் மாற்றும் நாயன்மார்கள் குருபூசைகள், திருவருட் செல்வர் விழா, திருவாசக விழா, திருவள்ளுவர், பாரதியார் நினைவு தினங்கள் என்பனவற்றை வருடம் தோறும் சைவ சித்தாந்த மன்றத்தின் ஊடாக நடத்தி வந்தார். இவ்விழாக்களில் பண்ணிசை, பேச்சு,நாடகம் போன்ற நிகழ்வுகளை ஒழுங்கு செய்து மாணவர்களை பங்குபெற ஊக்குவித்தார். கனடாவிற்கு வருகை தரும் சைவ ஆதினத்தின் முதல்வர்க ளையும், சைவத்தமிழ் அறிஞர்களையும் மற்றும் கனடா வாழ் சைவ அறிஞர்களையும் வரவேற்று இவ்விழாக்களில் அரிய உரைகளை ஆற்ற வைத்து எல்லோரும் பயனுறச் செய்தார். அத்தோடு திருவாசக முற்றோதல் நிகழ்வினை மார்கழி மாதத்திலும், மணிவாசகர் குருபூசை நாளிலும் மன்ற அங்கத்தவர்கள், மாணவர்கள் மற்றும் சைவ அன்பர்கள் பலரை கலந்து கொள்ளச் செய்து வருடம் தோறும் தவறாது நடாத்தி வந்தார்.

சிவநெறிச் செல்வர் விசுவலிங்கம் அவர்கள் ஆற்றிய சைவத்தமிழ் பணிகளில் சிறப்பான இடத்தை வகிப்பது, அவர் சைவத்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதில் காட்டிய பேராவலும் அர்ப்பணிப்பும் ஆகும். தனது இளவய தில் பல கணிதத்துறை சார்ந்த நூல்களை எழுதி வெளியிட்ட அன்னார், 1982 ம் ஆண்டு தாயாரின் நினைவாக சைவநெறி தோத்திரத் திரட்டு ஒன்றினை வெளியிட்டதன் மூலம் சைவத்தமிழ் நூல்களை பதிப்பிக்கும் பணியினை ஆரம்பித்தார். கனடாவில் தான் மேற்கொண்ட சைவத்தமிழ்ப் பணிகளுக்கு உதவும் வகையில் சைவ சித்தாந்தமன்ற வெளியீடாக "அன்புநெறி" என்னும் மாத இதழை அதன் நிர்வா க ஆசிரியராகப் பணியாற்றி தமது துணைவியாரின் துணையுடன் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக வெளியிட்டு வந்தார்.



இம்மாத இதழுக்கு தனது மானசீக ஞானகுருவினர்களான சிவத்திரு வைத்தீஸ்வரக் குருக்கள், துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரை சிறப்பு ஆசிரியர்களாக விளங்க வைத்து அவர்களின் ஆசிகளையும் அறிவுரைகளையும் மன்றச் செயற்பாடுகளுக்கு பெற்றுக்கொண்டார். அன்புநெறி சஞ்சிகைக்கு பல்வேறு இடங்களில் வாழும் அறிஞர்களிடமிருந்து தகுந்த கட்டுரைகளைப் பெற்றுக் கொள்ளுவது முதலாக கருத்தாளம் மிக்க ஆசிரிய தலை-லயங்கங்களை தீட்டி பல பணிகளை சிறப்பாக ஆற்றினார்.

அவர் பல தோத்திர நூல்களை வெளியிட்டதுடன் சைவம் வளர்த்த பெரியார்கள் பற்றியும் சைவசித்தாந்தம் பற்றியும் வெளிவந்த நூல்களை புதிய பதிப்புகளாகவும் மறுபதிப்பு களாகவும் வெளியிட்டார். காரைநகர் கார்த்திகேயப் புலவர் இயற்றிய "திண்ணபுர அந்தாதி" என்ற பக்திநூலின் முன் னைய பதிப்புப் பிரதிகள் தீர்ந்து மக்களிடம் கைவசம் இன்மையால், அமரர் வைத்தீஸ்வரக் குருக்களின் வேண்டு கோளுக்கு இணங்க இந்நூலை மூன்றாம் பதிப்பாக 2011ம் ஆண்டு சைவ சித்தாத்த மன்ற வெளியீடாகப் பதிப்பித்தார்.

மேலும் "அவர்களுக்குப் பிறகு அருணாசலம் தான்" என்று போற்றப்பட்ட காரைநகரில் தோன்றி நாவலருக்குப் பின் ஈழத்தில் சைவப் பயிர்காத்த "கரும வீரன் மகான் திரு ச. அருணாசல உபாத்தியாயர் பற்றிய வரலாற்று நூலின் முதற் பதிப்பு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெளிவந்து முற்றாகவே அருகிப்போன நிலையில் அம்மகானது பெரும் பணிகள் பற்றிய விழிப்புரணர்வு மக்கள் மத்தியில் இல்லாமல் போயிற்று. இதனால் கவலை கொண்ட விசுவலிங்கம் அவர்கள் அமரர் வைத்தீஸ்வரக் குருக்களின் தூண்டுதலினால் "சைவ ஆசிரியர்களை தோற்றுவித்த திரு. ச.அருணாசலம்" என்ற தலைப்புடன் திரு. சி.கணபதிப் பிள்ளை ஐயர் அவர்களால் எழுதப்பட்ட வரலாற்று நூலை இரண்டாம் பதிப்பாக 2015ம் ஆண்டு மிகவும் சிறப்பான முறையில் பதிப்பித்தார். இந்நூலை கனடாவில் மட்டுமன்றி ஈழத்திலும் மற்றும் உலகின் பல நாடுகளிலும்



வெளியீடு செய்ததின் மூலம் மகான் அருணாசல உபாத்தியாரின் மகத்தான பணிகள் குறித்த விழிப்புணர்வை உலக சைவத்தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார்.
அத்துடன் மன்ற வெளியீடாக "கார்த்திகேய புலவர் மலர்" "வைத்தீஸ்வரர் மலர்" "சித்தாந்த செமும் புதையல்கள்" "சிவத்தமிழச் செல்வியின் திருநெறிய செந்தமிழ்" "சித்த யோக சுவாமிகள்" உள்ளிட்ட பல நூல்களையும் பதிப்பித்து சைவத்தமிழ் உலகம் பயனுறச் செய்தார். சிவநெறிச்செல்வர். விசுவலிங்கம் எழுதிய கட்டுரைகள், பதிப்பித்த நூல்கள் அவர் நுண்மான் நுனைபுலனும் நுட்பமான ஆரா ய்ச்சித் திறனும் உடையவர் என்பதை உணர்த்தி நிற்கின்றன.

திரு.விசுவலிங்கம் அவர்கள் பல நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவராய் கடமையில் கட்டுப்பாடும் கண்ணியமும் உடையவராய் நமது சைவத் தமிழ்ச் சமூகத்திற்கு அவர் ஆற்றிய அரும் பணிகளை வியந்து சான்றோர் பலர் 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற அவரது பவள விழாவில் வாழும் போதே வாழ்த்த வேண்டும் என்ற பண்பிற்கு இணங்க அன்னாருக்கு பாராட்டு உரைகள் வழங்கியிருந்தார்கள். இவரது சமயத் தொண்டுகளை பாராட்டி உலகின் பல பாகங்களிலும் உள்ள பல அமைப்புக்கள் சிறப்புச் செய்தன. தமது 85 ஆவது வயதில் 08-10-2023ல் நடந்த சிவநெறிச் செல்வரின் அமரத்துவம் எய்திய நிகழ்வு சைவத் தமிழ் உலகிற்கு பேரிழப்பாக அமைந்து விட்டது.

இடைவிடாது சிவனடியே சிந்தித்து பன்னிரு திருமுறைகளை தனது வழிபாட்டு நெறியாகக் கொண்டு சைவத்தமிழ் பணியே வாழ்கை நோக்காகக் கருதி வாழ்ந்த சைவப்பெரியார் விசுவலிங்கம் அவர்கள் வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க அவதரித்த காழியர் கோன் காலத்திலிருந்து இற்றை வரை நமது சைவத் தமிழ் மரபு தளர்வடையாது செல்வதற்கு காரணமாக இருந்த பேரருளாளர் வரிசையில் வைத்து "அப்பாலும் அடி சாந்தாருக்கு அடியேன்" என்ற சுந்தரரின் வாக்கிற்கு அமைய போற்றுதற்குரியவர். மேற்படி சுந்தரரின் தேவார வரியை விரிவு செய்யும் சேக்கிழார் பெருமானின் பின்வரும் பாடல் நினைந்து சிவ-நெறிச் செல்வர். விசுவலிங்கம் அவர்கள் சிவன் திருவடிக்கலப்புற்று வீடு பேறடைய, ஈழத்து சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர பெருமாளை இறைஞ்சுவோமாக.

மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டுக்கு அப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நா வேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்
நல் தொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூ வேய்ந்த நெடுஞ் சடை மேல் அடம்பு தும்பை
புதிய மதி நதி இதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல் கொடியான் அடிச்சார்ந்தாரும்
செப்பிய அப்பாலும் அடிச் சார்ந்தார் தாமே.




'ஒப்பற்ற சேவையாளர் அமரர் தில்லையம்பலம் விசுவலிங்கம்' இங்கே எடுத்துவரப்பட்ட அமரர் தில்லையம்பலம் விசுவலிங்கம் அவர்களது மறைவையொட்டி அன்னாரது பணிகளை தொகுத்து கனடா காரை கலாசார மன்றத்தின் 'காரை வசந்தம்' 2023' விழா மலருக்காக எழுதியவர் கலாநிதி தம்பிராசா ரவிச்சந்திரன் அவர்கள் ஆவார்.



கலாநிதி தம்பிராசா ரவிச்சந்திரன் காரைநகர் களபூமி விளானையை சேர்ந்தவரும் காரைநகர் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபருமான அமரர் சின்னத்தம்பி தம்பிராஜா அவர்களின் சிரேஸ்ட மகனும், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையில் ஆரம்ப கல்வியை கற்று யாழ் இந்துக் கல்லூரியில் உயர் கல்வியை பயின்றவர்.

IIT Madras மின்னியல் பொறியியல் பட்டதாரியான இவர் கனடா Wateloo பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை தொடர்ந்து மின்னியல் பொறியியலில் M.A.Sc.(Masters) பட்டத்தினையும் தொடர்ந்து, மின்னியல், பொறியியல் ஆகியவற்றில் PH.D(கலாநிதி) பட்டத்தினையும் பெற்றுக்கொண்டவர். சமய உணர்வும் சமூக சிந்தனையும்கொண்டு விளங்கும் இவர் ஊர்ப்பணியிலும் அதிக அக்கறை கொண்டு அவற்றிற்கு ஆதரவளித்து உதவி வருபவர்.

'எனது ஊர் காரைநகர்' காலாண்டு சஞ்சிகையாக 2016ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கனடா றிச்மன்ட் ஹில் இந்து ஆலயத்தில் வெளியிட தயாரான போது அன்றைய தினம் நடைபெற்ற திருவாதிரை ஆருத்ரா தரிசனத்திற்காக கலந்து கொண்ட திரு தில்லையம்பலம் விசுவலிங்கம் அவர்களது கைகளால் முதலாவது பிரதி பிள்ளையார் முன்னிலையில் வெளியிட்டு வைக்கப்பட்டது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூரத்தக்கது.

காரைநகர் தேசிய சேமிப்பு வங்கியில் (NSB) பத்து ஆண்டுகள் உதவி முகாமையாளராக பணியாற்றி முகாமையாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு.நடராஜா வைகுந்தன் அவர்களிற்கு 'எனது ஊர் காரைநகர்' நடாத்திய பிரியாவிடை நிகழ்வு 12.08.2023

காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி கிளையின் உதவிமுகாமையாளராக கடந்த பத்து ஆண்டுகளிற்கு மேலாக பணி புரிந்தவரும் யாழ் மானிப்பாயை சேர்ந்தவருமான திரு,நடராஜா வைகுந்தன் அவர்களின் காரைநகரில் பத்து ஆண்டு கால அளப்பரிய சேவையினை பாராட்டி காரைநகர் மக்கள் பராட்டி பிரியாவிடை அளிக்க விரும்பினார்கள். அதற்காக 'எனது ஊர் காரைநகர்' அனுசரணையினை வேண்டினர்.

முகாமையாளராக பதவி உயர்வு பெற்று மன்னார் தேசிய வங்கி கிளைக்கு செல்லும் திரு.நடராஜா வைகுந்தன் அவர்கள் 'எனது ஊர் காரைநகர்' பாடசாலைகளிற்கும் காரைநகர் மக்களின் நலனில் அக்றையோடு செயற்பட்டு வருவதை அவதானித்து அவர்கள் உச்ச பயனடையும் வகையில் கடந்த காலங்களில் வங்கியினால் வழங்கப்படும் சலுகைகளை 'எனது ஊர் காரைநகர்' ஊடாக பெற்றுக் கொள்ளும் வகையில் செயற்பட்டவர்.

2022ம் ஆண்டு 150 காரைநகர் மாணவர்களிற்க தலா 1000 ரூபா வைப்பிலிட்டு சிறுவர் சேமிப்பு கணக்கினை ஆரம்பித்து வைத்தால் வங்கியினால் வழங்கப்படும் மேலும் தலா 1000 ரூபாய்களை பெற்றுக்கொடுக்கலாம் என ஆலோசனை வழங்கியதுடன் குறுகிய காலத்தில் 150 காரைநகர் பாடசாலை மாணவர்களிற்கு ஆரம்ப சேமிப்பு கணக்கை ஆரம்பித்து வைத்தவர். அது மட்டுமன்றி 2023ம் ஆண்டு வங்கியின் அத்திட்டம் நடைமுறையில் இல்லாத போதிலும் வங்கியின் கொழும்பு மேலிடத்தில் இத்திட்டத்தினை எமக்காக வளங்கவும் பரிந்துரை செய்து மேலும் 100 காரைநகர் பாடசாலை மாணவர்களிற்கு ஆரம்ப சேமிப்பு கணக்கினை ஆரம்பித்து வைத்தவர். அத்துடன் 2023 மார்ச் மாதம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு காரை மத்தியை சேர்ந்த 35 மகளிருக்கு குடும்ப நிலைமைகளை கருத்தில் கொண்டு 2,000 முதல் 5,000 ரூபா வரை வைப்பிலிட்டு வங்கிக் கணக்கு இல்லாத மகளிருக்க வங்கி கணக்கு ஆரம்பித்து கொடுத்ததுடன் அவர்களிற்கு வங்கியினால் கொடுக்கப்படுகின்ற அதிகூடிய சலுகைகளை பெற்றுக்கொடுத்தவர்.

2015ம் ஆண்டு கனடா காரை கலாசார மன்றத்தினால் காரைநகர் ஆரம்ப பாடசாலைகள் 12க்கு தலா பத்து இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பில் இட்டு வழங்கிய போது அப்போதைய வங்கி முகாமையாளராக கடமையாற்றிய திரு.A.கெங்காதரன் அவர்களுடன் இணைந்து நிரந்தர வைப்பு பாதுகாப்பானதாக இருப்பதற்காக வங்கியின் கொழும்பு மேலிட பணியகத்துடன் தொடர்பு கொண்டு நிரந்தர வைப்புக்கான நிதியினை மீளப்பெறப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கனடா காரை கலாசார மன்றம், காரைநகர் அபிவிருத்தி சபை மற்றும் காரைநகர் பாடசாலைகளின் அதிபர்களின் ஒப்புதலை பெறவேண்டும் என்கின்ற ஆவணத்தை தயார் செய்து நிரந்தர வைப்பில் இடப்பட்ட ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய்களிற்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொடுத்தவர் என்பதும் அதற்கான ஆலோசனைகளை வழங்கியவரும் திரு.நடராஜா வைகுந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

12.08.2023 அன்று திரு.நடராஜா வைகுந்தன் அவர்களது பிரியாவிடை வைபவத்தின் போது கலந்து கொண்ட காரைநகர் மக்கள் மற்றும் வர்த்தகர்கள் பலரும் கண்கலங்க பிரியாவிடை நிகழ்வில் கலந்து கொண்டதும் திரு.வைகுந்தன் நடராஜா அவர்கள் தனது நன்றியறிதலை தெரிவிக்க ஒலி வாங்கியை நாடியதும் பிரிவை உணர்ந்த வாய்விட்டு அழுத காட்சிகளும் திரு.நடராஜா வைகுந்தன் அவர்கள் காரைநகர் மக்களிடத்தில் வைத்திருந்த மரியாதையும் அவர்களிற்கான பணிகளும் சான்றுகளாக அமைந்தன.

பிரியாவிடை நிகழ்வின் போது தீசன் திரவியநாதன் அவர்களால் காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்தில் மாணவர்கள் வருகையை அதிகரிக்க நிரந்தர வைப்பில் இடப்பட்ட 50 இலட்சம் ரூபாய்களில் இருந்து கிடைக்கப்பெற்ற யூன், யூலை மாதங்களில் இருந்து பெறப்பட்ட வட்டி பணத்தின் ஊடாக 25 மாணவர்களிற்கு ஊக்கத் தொகையாக தலா 2,000 வழங்கப்பட்டதுடன் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டளவில் பாடசாலை செல்லும் மாணவர்களை உடைய 5 குடும்பங்களிற்கு தலா 5,000 வும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.









மேலும் பிரியாவிடை நிகழ்வின் புகைப்படங்கள் முன்அட்டை உள்பக்கத்தில் ...

**காரைநகர் முன்பள்ளி ஆசிரியர்களிற்கு 'எனது ஊர் காரைகர்' எடுத்துக்கொண்ட முயற்சிகளினால் ' தீபாவளி போனஸ் ' நிதி வழங்கப்பட்டது**

காரைநகரில் இயங்கும் 14 முன்பள்ளிகளில் 409 பிள்ளைகளிற்கு 36 ஆசிரியைகள் கல்வி கற்பித்து வருகின்றார்கள். இவர்களில் 25க்கும் மேற்பட்ட ஆசிரியைகள் மாதாந்தாம் 15,000 ரூபாவிற்கும் குறைவான நிதியையே மாதாந்த வேதனமாக பெற்றுக்கொள்கின்றார்கள்.

இதனை கருத்தில்கொண்டு இவர்களது பணியினை ஊக்குவிக்கும் வகையில் காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக அனைத்து ஆசிரியர்களிற்கும் ' தீபாவளி போனஸ் ' 11.11.2023 அன்று அபிவிருத்தி சபை காரியாலயத்தில் வழங்கப்பட்டது. காரைநகரில் முன்பள்ளிகள் அமைந்துள்ள இடங்கள், கல்வி கற்பிக்கும் ஆசிரியைகள் மற்றும் அவர்கள் கிரமமாக பெறும் மாதாந்த வேதனத்தை அடிப்படையாக கொண்டு 2,000 ரூபா முதல் 10,000 ரூபா வரை ஒவ்வொரு ஆசிரியைகளும் பெற்றுக்கொள்ளும் வகையில் ' எனது ஊர் காரைநகர்' ஊடாக முகநூலில் வெளியான தகவல் அறிந்து வழங்கியவர்களது நிதி 226,000 ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது.

முகநூல் வாயிலாக வெளியான தகவல் அறிந்து நிதி உதவி வளங்கியவர்களின் நிதி நேரடியாக அவர்களது பெயரில் காரைநகர் அபிவிருத்தி சபையினரிடம் கையளிக்கப்பட்டு அவர்களிற்கு காரைநகர் அபிவிருத்தி சபை ரசீதும் வழங்கப்பட்டது. இதற்கான நிதியுதவி வழங்கியவர்கள் விபரம் வருமாறு:

சிறிகரன் இந்திரன்(கனடா) - 12,000 ரூபா
மாலினி முரளி (கனடா) - 24,000 ரூபா
தவச்செல்வன் திருதியானேஸ்வரன் (USA) 66,000 ரூபா
கமலாதேவி தர்மநாயகம்(லண்டன்) 24,000 ரூபா
தீசன் திரவியநாதன் (கனடா) 100, 000 ரூபா

**மொத்தம் 226,000 ரூபாய்கள்**

**' அறக்கொடை செம்மல்' சுப்பிரமணியம் கதிர்காமநாதன்அவர்களின் காரைநகர் வைத்தியசாலைக்கான பயணம்**

காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு 12.08.2023 அன்று அறக்கொடை செம்மல் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்கள் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி, யாழ்மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக திட்டமிடல் அதிகாரி திருமதி அனுஷா யோகநாதன் ஆகியோருடன் விஜயம் செய்து வைத்தியசாலையில் உள்ள சகல குறைபாடுகளையும் கேட்டறிந்ததோடு அவை சம்பந்தமான மதிப்பீட்டு அறிக்கையை தயாரிக்கும்படியும் சகல வேலைகளையும் தனது சொந்த நிதியில் நிறைவேற்றி தருவதாகவும் உறுதியளித்தார். இதன்போது வைத்தியசாலை வைத்தியர் டாக்டர் செந்தூரன், மற்றும் காரைநகர் பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.








## யா/யாழ்ற்ரன் கல்லூரி க.பொ.த. சா/த பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் விபரம் 2022(2023)

| பெயர் | பெறுபேறு |
|---|---|
| 1. ச.சஞ்சீவன் | 9A |
| 2. சி.அபிநயா | 8A, B |
| 3. செ.தர்சிகா | 8A, B |
| 4. இ.தமிழினி | 7A, 2B |
| 5. உ.தனுஜா | 7A, B, C |
| 6. ச.பவக்குமரன் | 6A, 2B, C |
| 7. லி.சரண்யா | 6A, B, 2C |
| 8. கோ.தர்சனா | 6A, B, 2C |
| 9. ப.லக்சன் | 6A, 3C |
| 10. ச.கோபிகாந் | 6A, B, C, S |
| 11. யோ.தனேசன் | 5A, 3B, C |
| 12. அ.திவாஜினி | 5A, 2B, 2C |
| 13. உ.சகானா | 5A, B, C, S, W |

**பொதுமக்களுக்கான முக்கிய அறிவித்தல்**

2024 ம் ஆண்டுக்கான செலுத்த வேண்டிய சோலை வரியை 2024-01-31 இற்கு முன்னர் செலுத்துபவர்களுக்கு **10%** கழிவு வழங்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கின்றேன்.

செயலாளர்,
பிரதேச சபை, காரைநகர்




## சமூக அமைப்புக்களை ஒருங்கிணைத்து பிரதேச அபிவிருத்தியினை முன்னெடுப் பதற்கு காரைநகர் பிரதேச சபை திட்டம் முன்வைப்பு

காரைநகர் பிரதேச நுழைவாயில் பகுதியினை அழகுபடுத்தி ஒழுங்கமைக்கும் செயற்பாட்டிற்காக " அழகிய நுழைவாயில் " என்னும் திட்டத்தின் கீழ் காரைநகர் பிரதேச சமூக அமைப்புக்களை ஒன்றிணைத்து அவ்வமைப்புக்கள் மூலமாக அழகுபடுத்தல் அபிவிருத்திச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கான விசேட திட்டத்தினை சபை வகுத்துள்ளது.

இச்செயற்றிட்டத்தின் மூலம் சமூக அமைப்புக்களை வலுப்படுத்தி அவர்களை சமூக அபிவிருத்தியில் பங்கு கொள்ள வைக்கும் நோக்கத்துடன் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் மூலம் அமைப்புக்கள் சமூகம் சார் அக்கறையுள்ள அமைப்பாக மாற்றம் பெறுவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்த முடிகின்றது எனவும், இவ்வேலைத்திட்டத்தில் ஆர்வமுள்ள சமூக அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் சபையுடன் தொடர்பு கொண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பதனையும் காரைநகர் பிரதேச சபை அழைப்பு விடுத்துள்ளது.




"தூய காரைநகர்" செயற்திட்டத்தின் மூலம் காரைநகர் பிரதேச சபை திண்ம கழிவுகளை அகற்றி வருகின்றது குறிப்பிடத்தக்கது. இச்செயற்பாட்டின் மூலம் கணிசமான கழிவுகள் பொதுமக்களினால் வழங்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளதாகவும் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

டிசம்பர் மாதம் பெய்த மழையினால் காரைநகர் சுற்றுவட்ட வீதியினை மூடிய வெள்ளத்தினால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. அதனையடுத்து பிரதேச சபை திட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் நெறிப்படுத்தலின் கீழ் ஊழியர்களினால் வடிகான்கள் சீரமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டது.




## காரைநகர் அபிவிருத்தி சபை நடாத்திய காரைநகர் நூற்றாண்டு விழா 24.09.2023

காரைநகர் அபிவிருத்திச் சபை
மணற்காட்டு அம்மன் வீதி, காரைநகர், இலங்கை.
KARAINAGAR DEVELOPMENT SOCIETY
Manalkadu Amman Veethy, Karainagar, Sri Lanka.
Regd No. KR/AGA/SS/NGO/2006/02 Tel : 021 221 1757 E.mail : kdskarai@gmail.com

**கா**ரைதீவு என்னும் பெயர் கொண்ட காரை மண் ‘ காரைநகர் ‘ என பெயர் மாற்றம் கண்டு 100 ஆண்டுகள் நிறைவையொட்டி காரைநகர் அபிவிருத்தி சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தது. 1923.09.12 அன்று காரைநகர் என்ற பெயரை உத்தியோகபூர்வமாக பெற்றுக்கொண்டது.

காரைநகர் அபிவிருத்தி சபையினால் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களை முன்னிட்டு காரைநகர் மக்களிடத்தே நீச்சல் போட்டி, மரதன் ஓட்ட போட்டி, சைக்கிள் போட்டி, கரப்பந்தாட்ட போட்டி, மென்பந்து கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்ட போட்டி, மற்றும் தமிழ்திறன் போட்டிகளான பேச்சு போட்டி, எழுத்துப்போட்டி, கட்டுரை போட்டிகளும் நடாத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து நூற்றாண்டு கொண்டாட்டத்தின் இறுதி நிகழ்வாக 24.09.2023 அன்று காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகர்த்த மண்டபத்தில் நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

இந்நிகழ்வுகள் காரைநகர் அபிவிருத்தி சபை தலைவர் திரு.விஸ்வலிங்கம் ஹம்சன் அவர்களது தலைமையில் இடம்பெற்றிருந்தது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலாளர் திரு.சாம்பசிவம் சுதர்சன் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பதில் செயலாளர் திரு.கைலாயபிள்ளை சிவகரன், வடமாகாண உதவி கல்விப்பணிப்பாளர் திரு.தில்லைநாதன் தர்மலிங்கம் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் நூற்றாண்டு விழாவிற்கு நிதி அனுசரணை வழங்கிய கனடா காரை கலாசார மன்றம், பிரித்தானியா களபூமி ஒன்றியம், திரு.தியாகராசா ஞானேஸ்வரன், திரு.சண்முகராஜா சண்முகநாதன், திரு.முருகேசு யோகராசா, திரு.குலரத்தினம் சர்வா, திரு.திரவியநாதன் பிரமேந்திரதீசன்(எனது ஊர் காரைநகர்) ஆகியோர் சார்பாக ஒவ்வொருவரும் கௌரவ விருந்தினர்களாக அழைக் - கப்பட்டிருந்தனர்.

காரைநகர் அபிவிருத்தி சபை செயலாளர் திரு.பொன்னம்பலம் பரந்தாமன் அவர்களது வரவேற்புரை மற்றும் கிழவன்காடு கலாமன்ற மாணவர்களின் நாட்டியாஞ்சலி நிகழ்வுடனும் விழா ஆரம்பித்தது.

விழாவில் திரு.கந்தையா சதாசிவம் அவர்கள் ‘ காரை தீவும் காரைநகரும் ‘ என்னும் தலைப்பிலும், செம்மொழிச்செல்வி கலாபூஷணம் பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் ‘ காரைநகரின் பண் பாட்டு விழுமியங்கள் ‘ என்னும் தலைப்பிலும், இலங்கை வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் திரு.குலசேகரம்பிள்ளை சிவஞானசுந்தரம் ‘ காரைநகரும் பொருளா தாரமும் ‘ என்னும் தலைப்பிலும், காரைநகர் முன்னாள் பிரதேச சபை தவிசாளர் திரு. கணேசபிள்ளை பாலச்ச ந்திரன் ‘ கடந்த நூறு ஆண்டுகளில் காரைநகரின் அபிவிருத்தி ‘ என்னும் தலைப்பிலும். கலாபூஷணம் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை அவர்கள் ‘காரைநகரும் ஆன்மிகமும் ‘ என்னும் தலைப்பிலும், காரைநகர் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சுப்பிரமணியம் செந்தூரன் ‘ அன்றும் இன்றும் எனது ஊர் காரைநகர் ‘ என்னும் தலை ப்பிலும், காரைக்கவி கந்தையா பத்மநாதன் அவர்கள் ‘ எனது ஊர் காரைநகர் ‘ என்னும் தலைப்பிலும், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆங்கிலத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரட் ணம் அவர்கள் ‘ காரை நகர் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட உத்தமர்கள் ‘ என்னும் தலைப்பில் சிறப்புரைகள் ஆற்றினார்கள்.

காரைநகர் கிராம உத்தியோகத்தரும் கவிஞருமான திரு.வ.வடிவழகையன் அவர்கள் ‘ காரைநகர் ‘ சிறப்பு கவிதையும் மேடையேறியிருந்தது.











# கனடா காரை கலாசார மன்றம் கனடாவில் நடாத்திய 'காரை வசந்தம்' கலை விழாவும் காட்சிகளும் 02.12.2023



கலை உணர்வோடு காரை மண்ணின் உணர்வும் பெருக்கெடுத்தோடி வரலாற்றுப் பெருவிழாவாக அமைந்தது காரைவசந்தம் 2023. கனடா-காரை கலாசார மன்றத்தினால் ஆண்டுதோறும் பெருமையோடு வழங்கப்பட்டு வருகின்ற காரை வசந்தம் கலை விழா இம்முறை 21வது ஆண்டாக சென்ற டிசம்பர் 02,2023 அன்று தமிழிசைக் கலா மன்ற அரங்கில் தலைவர் திரு.சிவசம்பு சிவநாதன் தலைமையில் நடைபெற்று பலவகை யிலும் வரலாறு படைத்து பெருவிழாக அமைந்துவிட்டது.



காரைதீவு காரைநகராக பெயர் மாற்றம் பெற்ற நூற்றாண்டுச் சிறப்பு விழா, காரைச் சிறார்களும் இளையோரும் தமது கலைப் படைப்புக்களினால் சபையோரை கட்டிப்போட்டிருந்த விழா. காரை மண்ணுக்கு பெரும் புகழினைத் தேடித் தந்து கொண்டுள்ள காரை மாதாவின் புதல்வனான முன்னாள் சுவீடன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். கனடா-காரை கலாசார மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காரை.உறவுகளின் நலன்பேணுகின்ற திட்டங்களுக்கு சிறப்பாக கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு பேராதரவினை வழங்கிய விழாவாக அமைந்தது.



காரை மண்ணின் பெருமையினையும் மகிமையினையும் பிரபலிக்கின்ற இருபத்தைந் துக்கு மேற்பட்ட ஆக்கங்கள், வரலாற்றுத் தகவல்கள், மண்ணின் நினைவுகளை சுமந்து வருகின்ற புகைப்படங்கள் உள்ளிட்ட மண் சார்ந்த பல்வேறு விடயங்களைத் தாங்கிய கனதியான சிறப்பு மலராக காரைவசந்தம் விழா மலர் வெளியிடப்பெற்றிருந்தது. கலை உணர்வோடும் மண்ணின் உணர்வோடும் வருகைதந்த காரை உறவுகளினால் அரங்கம் நிரம்பியிருந்தது. அனைத்து அம்சங்களிலும் பொலிவுபெற்று வரலாறாகிய காரை வசந்தத்தின் பெருவெற்றி குறித்து இவ்விழாவின் வெற்றிக்காக உழைத்த கனடா-காரை கலாசார மன்றமும் கனடா வாழ் காரை உறவுகளும் பெருமிதமும் பெரு மகிழ்ச்சியும் அடையமுடியும்.

























# 'எனது ஊர் காரைநகர்', www.karainews.com காரைநகர் அபிவிருத்தி சபையுடன் இணைந்து வழங்கிய "காரைநகர் சேவையாளர்" கௌரவம் 01.01.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது

காரை மண் சுயநலமற்ற பொதுப்பணியாளர்களினால் தான் வளர்ச்சி கண்டு வருகின்றது. காரை மண் போருக்கு பின்னர் மீண்டும் துரிதகதியில் சகஜநிலை பெறவும், முன்னேற்றம் பெறுவதற்கும் கல்வி, சேவை, ஊர் பணி என்பவற்றில் தமது அன்றாட கடமைகளில் தமது தேவைகளிற்கும் மேலாக ஒருபடி மேலே சென்று மக்களிற்காகவும் சேவை புரிந்த சேவையாளர்களால் மட்டுமே காரை மண் இன்று இவ்வளவு தூரம் துரித வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

அதனை கருத்தில் கொண்டு முதற்கட்டமாக 'எனது ஊர் காரைநகர் ' மற்றும் www.karainews.com இவ்வாறான சேவையாளர்களை இனம் கண்டு கௌரவிக்க திட்டமிட்டது. 2017ம் ஆண்டு முதன் முறையாக 20 சேவையாளர்களை கௌரவித்தது. தொடர்ந்து 2019ம் ஆண்டு மேலும் 10 சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மூன்றாவது தடைவயாக 01.01.2023 இல் மேலும் 7 சேவையாளர்களை கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றது. காரைநகர் மண்ணிற்காக மக்களிற்காக பணியாற்ற அரச மற்றும் தனியார் அமைப்புக்கள் ஊடாக உத்தியோக தேவைகளிற்காக காரை நகரிற்கு வரும் உத்தியோகத்தர்கள் தமது உத்தியோக பணிகளிற்கு அப்பால் காரை மக்களின் மனங்களில் நிலைத்திருக்கும் வகையில் கடந்த பல ஆண்டுகளில் பணி புரிந்தவர்களை அடையாளம் காணுவோம். சம்பளத்திற்காக பணியாற்றுபவர்களை விட சமுதாய முன்னேற்றத்திற்காக பணியாற்றுபவர்களை கௌரவிக்கின்றோம்.

இடம் பெயர்ந்த நகரங்களில் இருந்தும் இடம் பெயர்ந்த நாடுகளில் இருந்தும் காரை மண்ணின் வளர்ச்சிக்காக கரிசணையுடன் நிதி உதவி செய்தும் அதற்காக வளங்களை அள்ளி அள்ளி வளங்கி வந்தாலும் அவற்றினை உரிய முறையில் பயனாளிகளை சென்றடைய வைக்கவும் நேரடியாக காரை மண்ணில் இருந்து பாரபட்சம் பாராது சென்றடைய வைக்கின்றவர்களும், காரை மண்ணின் தற்போதைய வளர்சியில் அதற்கான தேவைகளை கண்டறிந்து தன்னலமற்ற வகையில் தெரிவித்து வரும் சேவையாளர்களை கனம் செய்வோம்,

மண்ணிற்காகவும் மக்களிற்காகவும் தன்னலமற்றவகையில் பணிபுரிபவர்களை வாழும் போதே வாழ்த்துவோம்.

2023.01.01 நியூ ஸ்ரார் கல்வி நிலையத்தில் நடைபெற்ற சேவையாளர் கௌரவத்தின் போது காரைநகர் பாட-சாலைகளில் 20 வருடங்களிற்கு மேலாக தொடர்ச்சியாக பணியாற்றி அன்றும், இன்றும், என்றும் அன்றைய மாணவர் மனங்களில் குடிகொண்டிருக்கும் 5 முன்னாள் ஆசிரியர்களும் வைத்தியர் மற்றும் சிரமதான தொண்டர் என 7 சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

1. நா.செல்வரத்தினம் (ஆசிரியர்)
2. A.சோமாஸ்கந்தன்(ஆசிரியர்)
3. கா.குமாரவேலு (ஆசிரியர், அதிபர்)
4. அருமைநாயகம் கமலேஸ்வரி(ஆசிரியர்)
5. திருமதி.நாகரத்தினம் தனலட்சுமி (ஆசிரியை, அதிபர்)
6. Dr.A.அம்பிகைபாகன்
7. திரு.செல்வராசா வேலாயுதபிள்ளை - (சிரமதான தொண்டன், பொதுப்பணியாளர்)

01.01.2023 அன்று காரைநகர் புதுறோட் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள NewStar கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்ற சேவையாளர் கௌரவிப்பு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அன்றைய யாழ் மாநகரசபை முதல்வர் கௌரவ வி.மணிவண்ணன் அவர்கள் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் Dr.T.சத்தியமூர்த்தி, யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு.R.T.ஜெயசீலன், வடமாகாண கல்வி அமைச்சின் முன்னாள் உதவிச்செயலாளர் திரு.ப.விக்கினேஸ்வரன், காரைநகர் பிரதேச சபை தவிசாளர் திரு.க.பாலச்சந்திரன், முன்னாள் அதிபர் கலாபூஷணம் மு.சு.வேலாயுதபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு காரைநகர் சேவையாளர்களை கௌரவித்தனர்.





விழாவிற்கு அழைக்க சென்றவேளை திருமதி அருமைநாயகம் மற்றும் திரு.சோமாஸ்கந்தன் ஆசிரியர்கள்



## 'எனது ஊர் காரைநகர்',www.karainews.com
## காரைநகர் அபிவிருத்தி சபையுடன் இணைந்து வழங்கிய "காரைநகர் சேவையாளர்" கௌரவம் புகைப்பட பதிவுகள்




















01.01.2023 அன்று நடைபெற்ற 'காரைநகர் சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வின் பதிவுகள்

